1739

Reg. No.
M. 2324.

தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா		காரியாலயம்:—
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0		No. 11, வேளாளர் தெரு,
புற நாடு ... ... ரு. 9 0 0		புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஞ டிசம்பர் மீ 20உ [No. 51.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	1001
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L.	1003
3.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	1005
4.	பொய்யாற் பொலிவது புலமை. K. இராஜகோபாலன்	1007
5.	உற்ற யாக்கையின் உறுபயன் என் N. துரைக்கண்ணன்	1009
6.	வானசாஸ்திரம்	1011
7.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B L.	1013
8.	தமிழ்ப் பாடம்.	1015
9.	வர்த்தமானம்.	1019

கலா நிலயம்.

இருப்பன அமையாவோ !

189034

இருப்பனவால் என்னபயன் உண்டாயிற்று என்பதைச் சற்றேனும் சிந்திப்பதின்றி இல்லாதன இருந்தால் நலமாம் என்று இழுத்[illegible]க் கொண்டாடுவதே இக்காலத் தொழிலாகிவி[illegible]து. தீண்டத்தகுவோரும் ஓரினத்தோரும் ஒரு [illegible]ச் சனங்களும், ஒரு தாய் வயிற்[illegible]தோரும், இன்னவர்க்குள்ளேயே ஒருவர்[illegible]ல் ஒருவர்[illegible]குணர்வு எல்லாம் இருக்கவேண்டுமாறு இருப்பது போல் பாவித்து, இனி இச் சகோதர நேயத்திற்குத் தீண்டப்படாதார் என்பார் ஒருவரே அயலாயிருப்பவர் போலவும், அவரையும் அவ்வன்பின் எல்லைக்குள் அழைத்துக் கொள்ளாதது கொடுமை போலவும் கூறுவதால் ஏது பயன்! அன்பும் அருளும் உடையனாயின் ஒருவன், அவன் தான் தழுவி மகிழும் தன் மைந்தர்முதல் தோட்டிஈறாக யாவரையும்தன்னுடைய அன்பினிற்கமைந்தவலயத்துள் அடக்கிக் கொள்வான்; அவர்களுடைய எதிரன்பிற்கும் பாத்திர[illegible]வான். இல்லையெனில் நெருங்கிப் பயில்வதெல்லாம் திருடற்கும், தீண்டுவதெல்லாம் அடித்தற்கும் கொல்வதற்குமே ஆதல் வேண்டும். ஆதலின் தீண்டியும் உண்டும் மணங்கொண்டும் மிகநெருங்கிப் பயில்வோர்க்குள்ளே அன்பும் கண்ணோட்டமும் காணாதிருக்கத் தீண்டாமையால் சிலர் அன்பிற்கு அயலாய்விட்டனர் என்றும், தீண்ட வைத்துவிட்டால் உள்ளன்பு பெருகி மாறி மாறி இருவர் இதயத்தும் பாய்ந்துவிடும் என்றும், எண்ணி விவகரிப்பதின் விபரீதத்தை முன்னோர் தலையங்கத்தில் விளக்கியுள்ளோம்.

இவ்விதமே, பாடசாலைகளில் பலபல படித்துள்ளவர்கள் அதனால் அடைந்த பயன் யாதென்று கூறுவதற்கு வாயில்லாமலிருக்க, எழுதப்படிக்கத் தெரியாதவர்களுடைய நிலைமைக்கு மிக இரங்கி அன்னவர் ‘முன்னேற்றத்திற்கு’ ஆரம்பக்கல்வி அவசியமாயிருக்கின்றதென்று விவகரிக்கின்ற விபரீதத்தையும் மற்றொரு தலையங்கத்தில் ஆராய்ந்தோம். பொய்யாமொழிப் புலவர் என்ற பேரை மாத்திரம் வாயளவால் மறக்காமல், அவர் சொல் ஒவ்வொன்றையும் செயலளவில் புறக்கணிக்கின்ற இந்நாட்டு இக்கால ஜனங்களை என் சொலி வியப்பது! ‘கற்றதனால் ஆய பயன் என் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்’’ என்று அத்திருவள்ளுவ நாயனார் தந்நூலின் முதலதிகாரத்திலேயே விளம்பியது உறுதியென மதிப்பாராயின், கற்றவரென்று தம்மை மதித்துக்கொண்டு மற்றவருக்குக் கல்வியில்லாக் குறையை நீக்கப் புகுவதன்முன், தாம் பெற்றகல்வியால் உறுவதற்கான பயனை அடைந்துவிட்டனரோ வென்று சிறிதேனுஞ் சிந்திக்கமாட்டார்களா! கலகலவென்று கூவுதற்குத் துணையாய நம் பாடசாலைக் கல்வியில்லா நந்தனே வாலறிவன் நற்றாள் சென்று தொழுதான். மற்றுக் கற்றவர்களென்று பட்டங்கள் கட்டிக்கொண்டிருப்பவர்

TL
ஊ211, N28 KN
N28. 1.51.

களில் எத்தனைபேர் முழுமுதற்கடவுளின் அடியிணையை அணைந்து தொழுகின்றார்.! கிண்டியிற் சென்று குதிரையின் குளம்பைத் தொழுவார் சிலர். 'சுயமரியாதை' தலைசிறந்து தம்மையே கும்பிட்டுக்கொள்வார் சிலர். இரவீந்திரநாத தாகோர் சிலநாட்களுக்குமுன் ஐரோப்பாவில் ஒரு பத்திரிகையின் பிரதிநிதிக்குச் சொன்னவாறு, "மாந்தரது வாழ்விற்கு எமனைப் வந்திருக்கும் எந்திரங்களைப் பணிந்து தொழுவார்" சிலர். இதனால் பக்தியுடைய பெருமக்கள் யாவரும் இலர் என்று நாம் கூறுவதாக எண்ண வேண்டா. அன்னோர் இருப்பாராயின் பூர்வ ஜன்ம வாசனையால் இக்காலக் கல்விகள் செய்த இடையூறுகளையும் கடந்த வீரர்களாவர் அவர்.

அரசியல் கட்சி வாதங்களிலும் இவ்வித விபரீதங்களையே காண்கின்றோம். அயலரசாட்சியின் 'ஆதிக்கம்' இல்லாமல் எல்லாவித உரிமைகளோடும் நம்மையே நாம் ஆண்டு கொள்கின்ற 'சுயராஜ்யம்' இல்லாததாற்றான் நம் நல்வாழ்வெல்லாம் இழந்துவிட்டோம், என்பர். அன்பும் அருளும் உடையதானாலன்றி வாழ்க்கை பண்பும் பயனும் எய்தியதாகாதென்ற அப்பொய்யாமொழிப் புலவர்தம் வாய்மையைக் கடைபிடிக்க வேண்டிய நாம், தம்மைத் தாமே தடையின்றி ஆண்டுகொள்கின்ற பிற நாடுகளில் அன்போடும் அருளோடும் நல்வாழ்க்கை நடப்பது எத்துணைத்தூரம் என்பதைச் சிந்தித்தபின் அன்றோ, இல்லாத உரிமைகள் வந்தவுடன் எல்லா வாழ்வும் கூடவே வந்துவிடும் என்று எண்ணக்கூடியவரா யிருக்கின்றோம். இருக்கின்ற ஆட்சி முறையிலேயே, நமக்குள் அன்புடையராய், அருள் சிதைக்கா உள்ளத்தராய் வேண்டுமெனின், வாழ்வதற் கியலுமென்பதை முன் பல இடங்களில் காட்டியுள்ளோம்.

பொருளாதாய விடயங்களிலும் இப்படியே நோக்கம் புரண்டிருக்கின்றது. கைத்தொழிலும் வர்த்தகமும் வளர்வதற்கேற்ற சாதனங்கள் இல்லாததால் நம் நாடு வறுமையுற்றிருக்கின்றதென்பர். நாடு வறுமையுற்றிருக்கின்றதென்றால் செல்வர்களே இல்லை என்ற பொருளில்லையே. இருக்கின்ற செல்வத்தால் செல்வவந்தர் எய்தும் பயன் எல்லாம் எய்தியபின் அன்றோ இல்லாத செல்வத்தை நினைத்து இரங்கவேண்டும். தன்னுடைய வறுமையால் பிறர்க்கொன்று கொடுப்பதற்கில்லையே என்று ஏங்குபவனே ஏழை. இட்டபின் உண்ணுதற்குக் காப்பவனே உண்ணுதற்குரியவன். அவ்வகை ஏழ்மையை நீக்குவதற்கும் இவ்வகை உணவை ஈட்டுதற்கும் தற்கால வர்த்தகமும் வேண்டா, கைத்தொழிலும் வேண்டா. இப்பொழுது இருக்கின்ற செல்வத்தை உதவி உதவிப் பிறர்வறுமையை நீக்கவேண்டுமென்ற மனம் உளதாயின், உதவி யாவும் செலவானபின், வேண்டுமெனின் புதுப்பொருள் ஈட்ட முயலலாமே. இம்மனம் இல்லாதவரையில் எவ்வளவு செல்வம் சேர்ந்தாலும் வறுமையோ ஒருபோதும் நீங்காது. "இருக்கின்ற பணத்தைக் கொண்டு வறுமையை நீக்குவதென்பது தற்கொலையன்றோ! இல்லாத பணத்தாலன்றோ அது செய்ய வேண்டும்" என்று முறையிடுவர் தனுதாய சாஸ்திர நிபுணர் (Economists). அது படுகொலைச் சாஸ்திரம் ஆமாறு முன்னோரிடத்தில் விளக்கியுள்ளோம்.

இனிக் 'கிராமப் புனருத்தாரணம்" என்றொரு கருத்து வழங்குகின்றது. அதுவும் இக்கால விபரீதத் தோற்றத்தின் ஓர் உறுப்பேயாகுமென்பதையும் முன்னோர் தலையங்கத்தில் விரித்துரைத்துள்ளோம். இருக்கின்ற வசதிகளால் கிராமவாசிகள் எய்த வல்ல நலங்கள் யாவும் எய்தாததேனெனத் தேராமுன் இன்னுஞ் சில எய்துவதற்கு யாவையே உள! அதுவுமன்றிக் கிராம வாழ்க்கையை ஒழுங்குபடுத்தப் புகுவது பட்டினத்து மக்களின் கடமை யென்பார், அப்பட்டின வாழ்க்கையாவும் ஒழுங்குபெற அமைந்து விட்டதெனுங் கருத்துடையார் போலும்.

முன்னுரைத்த இவ்விபரீதங்களுக்கெல்லாம் மூல காரணமாயிருப்பது, முறைகள் மாறினால் வாழ்வின் வளமனைத்தும் வந்தெய்தும் என்னுமோர்கொள்கை. மனம் மாறினால் அம்மாறிய மனத்திற் கேற்ற முறைகள் தாமே வந்தமையும் என்னும் உண்மைக்கு மாந்தர் கண் திறக்காதவரையிலும் இருட்டிலே நாம் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றி உழலவேண்டியவர்களாகத்தான் விவகரிப்போம்.

இவ்விபரீத வரிசையில் இப்பொழுது சேர்ந்திருப்பது இந்த ஹிந்தி பாஷை யொன்று. மழலையுங் குதலையும் ஈன்றோர் களிக்கப் பேசி பயின்ற தாய்ப் பாஷை ஆயிற்று. பள்ளியில் பன்னாள் முயன்று பெற்ற ஆங்கில மாயிற்று. காளிதாசனும் வால்மீகியும் வளர்த்தெடுத்த வடமொழியும் போயிற்று. இனி ஹிந்தி ஒன்று இல்லாக்குறையாற்றான் இந்நாடு துயருழந்து கிடக்கின்றது! ஷேக்ஸ்பியர் போலவும் கம்பர் போலவுங் காளிதாசன் போலவும் அப்பாஷையில் பெருங்கவிகள் இருந்திருக்கின்றனரோ, யாதோ யாம் அறியோம். ஆனால், அதன் இலக்கியங்களின் அருமையை நாம் அனுபவிக்காது கெட்டோம் என்று ஒருவரும் வாதிக்கவும் இல்லை. இந்தியர்களின் ஒற்றுமைக்குப் பொதுவாக ஒரு பாஷை இல்லாதது இடையூறாயிருக்கின்றதென்பது ஹிந்திபாஷையின் அவசியத்தைப் பாராட்டுகின்றவர்களின் முக்கியமான கொள்கை. ஒரே பாஷையைப் பேசுகின்றவர்களுக்குள் இருக்கவேண்டிய ஒற்றுமை யெல்லாம் இருந்தபின் பாஷை தெரியாத குறையினால் உறவு ஏற்படாத திசைகளை நோக்கலாமே. திருடும்பொருட்டுத் தீண்டுவதும் வையும் பொருட்டுப் பேசுவதும் நேர்வதெனின் தீண்டாமையும் பேசாமையுமே நலம். இனி வரப்போகும் சுயராஜ்ய முறையின்படி சட்ட சபைகளும் மற்ற அரசாங்கக் காரியங்களும் சரிவர நடை பெறுவதற்கு முன்சாக்கிரதையாக நாம் இப்பொழுது ஹிந்திபாஷையைக் கற்று வைத்துக் கொள்ளவேண்டுமென்பது, உயிர்நிலையாய் நிரந்தரமாய் இருக்கின்ற பொருள்களை விட்டுவிட்டு வாய்ப்பேச்சால் வாழ்விற்கு வழி செய்து வைக்கின்ற காரியமாகும். கழனிக்கு நீர் பாய்ச்சாமல் புறம்போக்கைச் செப்பனிடப் போவானேன்!

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[989-ம் பக்கத் தொடர்ச்சி]

3. சேக்கிழாரும் பின்னவரும்

(தோகுத்துச் சுட்டல்)

இவ்விரு புராணக் கதைகளும் பெரியபுராணக் கதைபோலவே மேலுக்குத் தோன்றுகின்றன. ஆனால் ஆழ்ந்து நோக்குமிடத்துப் புலனாகும் வேற்றுமை என்னே என்னே! ஆனந்தக் கூத்தர் பெரியபுராணக் கதையையே சுருக்கிச்சொல்லிப் போகின்றார். என்றாலும், அவரையும் அறியாமல் கதையை வேறுபடுத்திக் கூறிவிடுகின்றார். உட்கோளாக ஒளிர்வதனைக் காண்போம். சேக்கிழார் அன்பினைந்திணை ஒழுக்கத்தை ஒட்டித் தமியாராகக் கண்டு இன்பந் துய்த்தலைப் புகழ்கின்றார். ஆனந்தக் கூத்தரோ திண்ணனாரை ஐங்குடுமித் தேவரிடம் வேடர்கள் கொண்டுபோய்விட, அவர்கள் காட்டிய கடவுளைப் பின்னர் அன்புருவாக மாறி வழிபட்டமையைப் புகழ்கின்றார். இஃது அன்பினைந்திணையாகாது, பெருந்திணையென்று முன்னரே கூறினோம். கதையின் உறுப்புக்களிலும் வேற்றுமையுண்டு. காளத்திமலையையே கண்ணப்பர் ஆண்ட நாடாகக் கொள்கின்றார் கூத்தர். அவ்வாறாயின் திண்ணனார் அம்மலை முழுதினையும் அறிந்திருத்தல் இயல்பாதலின், அவர் அங்குள்ள நீர்நிலைகளைப்பற்றி உடன்வந்த வேடரை வினவுவது முன்னுக்குப்பின் முரண்படமொழிந்ததாகின்றது. நாட்டுவளம் கூறுகின்றதும் இறைச்சிவகையாற் பொருள் கொண்டாலன்றிச் சேக்கிழாரது புனைந்துரைபோலக் கதைக்குப் பொருத்தமற்றதெனலாம். பல்வளம் சிறந்த நாடாதலின் பாடலும் ஆடலுமாய்ப் பலபோது கழித்து ஒருபோது ஆறலைத்து விளையாடி ஆனிரை கொணர்ந்து போற்றிவளர்பர் என்று புகழ்வர் சேக்கிழார். ஆறலைத்தலே உயிர்உய்யும் வழியாகக்கொண்டு வயிற்றைவளர்ப்பவர் என்று நக்கீரரோடு வேடர்களைப்புகழ்கின்றார் கூத்தர். காடுபலி யூட்டுவதைக் கூறித் தேவராட்டியைக் கொணர்ந்தெதிர்விடுத்து அச்சநிலையில் உண்மை இயலாமைக் காட்டி அன்புநிலையோடு ஒத்துப் பார்க்கின்றார் சேக்கிழார். கூத்தரோ இந்தப் பலவகையான நிலையை எடுத்துக்கூறாது முருகனை வழிபட்டுக் கன்னி வேட்டையாடப் போவதாகக் கூறுகின்றார். வேட்டையாடச் சென்று, பன்றியைப் பின்தொடர்ந்து போய்த் தன்னினத்தாரின் பிரிந்து தலைவியைக் கண்டு தன்னுணர்வற்றுத் தனியின்பந் துய்க்கும் தலைவன் கதை கூறுவதுபோலக் கண்ணப்பர் கதையைப் பாடுகின்றார் சேக்கிழார். கூத்தரோ சேக்கிழார் கூறியதுபோலவே, வேட்டையும் கூறினார் பன்றியும் கூறினார். ஆனால் சேக்கிழாரின் உள்ளக்கருத்தை அறியாது போகவே வேடர்களைக் கடைசிவரையில் உடன் கொண்டு செல்கின்றார். எல்லோருமாகச் சேர்ந்து சென்று பெருந்திணைத் திருமணம் செய்துவைப்பது போலும் இவர்கூறும் இக்கதை. திண்ணனார் திரும்பி வரும்போது திரண்டிருந்தவர்கள் அனைவரும் அவரைப் பிடித்திழுத்து வலிப்பது இயல்பாகும்; ஆனாலும் அன்பின் கதைக்கு அழகாகாது. ஆதலின் பன்றிவேட்டை தொடங்கிய இடத்திலேயே வேடர்களை விட்டுவிட்டு வருகிறார் சேக்கிழார். இவ்வருமை இக்கதையில் இல்லை. திண்ணனார் திரும்பி வந்தபோது அழிபசி யுற்ற ஆண்டவர்க்குக் காடன் பொசுக்கிச் சுவையூட்டிய புலாலுணவு போதாதென்று மேலும் சென்று வேட்டையாடினார் என்று கூறுவதும், காடன் தீக்கடைந்து காய்ச்சி அறுசுவையூட்டிய பின்னர்க் கண்ணப்பரும் தீக்கடைந்து காய்ச்சி அறுசுவை யூட்டினார் என்று கூறுவதும் பயனொடு நிரம்பிய பாடல்களாகுமோ? தலைவன் அருந்த அவனுக்கு அடங்கியவர்கள் தின்னும் உணவு நிலையின் வேறுபாட்டையும் சேக்கிழார் கூறுவதுபோலக் கூத்தர் கூறுகின்றிலர். சேக்கிழார் திண்ணனாரின் அன்பொன்றினையே கூறிச்செல்லக் கூத்தரோ, பாரினில் கல்லையை வையாதும் பரிகலந் திருத்தியமைத்தும் நின்ற அச்சநிலையையும் புகழ்கின்றார். அவ்வாறு வழிபாட்டுயர்வினை அறிந்து அச்சநிலையில் நின்றவர், பூவினை மயிரில் ஒட்டிச்செல்லாது அதற்கொரு தட்டும் திருத்தியன்றோ அமைத்திருப்பர்? வாயே குடமாக நீர்முகந்து செல்வாரோ? ஈதெல்லாம் உணர்ந்த சேக்கிழார் இவ்வச்ச நிலையைக் கூறுகின்றிலர். இறைவனது திருவருள் நோக்கம் பெற்றுத் திண்ணனார் அன்பு வடிவமாக மாறி நின்றபோது அவ்வாறு செய்தருளிய ஆண்டவனின் திருவருளைச் சிறப்பித்துக் கூறுகின்றார். சேக்கிழார் இருதலையும் ஒத்த அன்பினைக் கூறுகின்றார் ஆதலின் அவருக்கு ஆண்டவன் அருளும் திண்ணனாரது அன்பும் உயர்வுதாழ் வற்றவை யாகவே, அவற்றில் ஒன்றினைச் சிறப்பித்துக் கூறுகின்றார். கூத்தரது திண்ணனார் "இவ்விறைச்சி கைக்காது', என்றுளதிர் மறையால் ஊட்டுவதும், சேக்கிழார் "தேனுமுடன் கலந்தது இது தித்திக்கும்" என்று உடன்பாட்டால் ஊட்டுவதும் கண்டோம். சேக்கிழார் அன்பின் கதையை உவகைச் சுவை சொட்டச்சொட்டச் சொல்லிப்போகின்றார் ஆதலின் தந்தையும் தாயும் தம் பிள்ளையைப் பிரிந்து தயங்கிநின்று துன்பக்கடலில் ஆழ்ந்தமையைக் கூத்தரைப்போல விரித்துரையாது குறிப்பாகச் சுட்டிப் போகின்றார். அக்குறிப்பின் பொருளாற்றலும் ஆனந்தக் கூத்தரது வெளிப்படைப் பாட்டிற்கில்லையே அன்றோ? சிவபெருமான் திண்ணனாரது எச்சில் நீரை யுயர்த்திப் புகழ்ந்து கங்கையினும் உயர்ந்ததென்று எடுத்துக் காட்டுகையில் கங்கையும் ஓரெச்சில்நீர் என்பதுபடப் பாடுகின்றார் சேக்கிழார்; கூத்தரோ கங்கையை மிகவும் புகழ்கின்றார். இத்தகைய கங்கை இவ்வெச்சில் நீர்போலச் சிவபெருமானுக்குச் சிறந்ததாகாமை எதனால் என்பதை இனிதே எடுத்து விளக்குகின்றிலர். பிள்ளைகளில் சிறிய பிள்ளையின் திருவடிகளே மெல்லியன என்பது உலகறிந்த தாதலின் சேயடியையே சேக்கிழாரின் சிவபெருமான் உவமை கூறுகின்றார். அதற்கு மேலும் தாமறிந்தமை கூற ஆனந்தக் கூத்தரின் சிவபெருமான் இரு பிள்ளைகளின் திருவடியையும் உவமையாகக் கொள்கின்றார். சேக்கிழார் கதைக்கு கண்ணப்பர் ஒருவரே தலைவர்; ஆனந்தக் கூத்தருக்கோ ஒருவருக்கிருவர் தலைவர்கள் வேண்டியது இன்றியமையாதது. உலகையும் உடலையும் விட்டு உயர்நிலை யடைதலே ஆனந்தக் கூத்தருக்கு வேண்டுவது. சேக்கிழார் அன்பு நிலையின் ஒன்றுபடுவதைக் கூறுவதோடு விட்டு விடுகின்றார். உடல் கழன்ற வீட்டுநிலையைச் (விதேகமுத்தி) சுடுகாட்டு நிலைஎன உட்கொண்டு உலகினர் ஓவென் றழுவர். மெய்யுணர்வுற்ற வீட்டுநிலையை (ஜீவன் முத்தி) வீட்டு

நிலை என்றே கொண்டு எல்லோரும் இன்புறுவர். உவமைக் சுவைவரக் கூறுகின்றவர் பின்னது கூறாது முன்னது கூறுவரோ? அவ்வாறு முன்னது கூறுவதால் வரும் ஏற்றந்தான் ஏதேனும் உண்டோ? ஆகவே, எல்லாப் படியாலும் எண்ணினால் ஆனந்தக் கூத்தரது கதை அன்பின் கதையும் அல்ல; கதையுறுப்புக்களால் ஒன்றாக ஒருமுகப்பட்ட கதையும் அல்ல. கூத்தரும் தம் தலைவனது அன்பிற்கு உவமை கூற வந்தபோது தழலிடு மெழுகென இடை அன்பிற்கு எடுத்துக் காட்டும் உவமையினை இயம்புகின்றமை இதை யுணர்ந்துதானோ என்று ஐயம் எழுகின்றது. இவ்வளவு வேற்றுமைகள் இருந்தாலும், இக்கதையில் உள்ள சொல்லும் பொருளும் முக்காலே மூன்றுவீசம் வரை, பெரியபுராணத்தினின்று எடுத்து ஏற்றபடி அமைத்துக் கொள்ளப்பட்டனவாகும்.

இனி, அடிகள் அருளிய கதையோ, இதனினும் இரண்டத்தனை நீண்டது. கதையையே சிறிது வேறு படுத்திக் கூறிச் செல்கின்றது. உயிர்நிலையான இடத்தில் என்ன காண்கின்றோம்? இறைவனே திண்ணனாரது கனவிலே தோன்றித் தம்மை வந்து வழிபடுமாறு வேண்டுகின்றார். பன்றி ஒன்று எழுந்தோடி இறைவன் எழுந்தருளி இருந்த இடத்தைக் காட்டி மறைகின்றது. இறைவர் இவரை நச்சிய பின்னர் இவர் அவரை நாடுகின்றார். ஆதலின் இது கைக்கிளை ஒழுக்கமாகும். கைக்கிளையில் பயின்றுவரும் கலக்க நிலையையும் கண்ணிடந்தப்புதவற்கு முன்னர்ப்புகழ்ந்துரைக்கின்றார். கைக்கிளையாகப் பாடுவதில் கடவுளது திருவருள் சிறந்து விளங்குவதுபோலக் கண்ணப்பர் அன்பு,பெருமைபெறுவதில்லை. தடுத் தாட்கொள்ளுதல் என்று கூறும் முறையை வற்புறுத்துகின்றார் அடிகள். முற்பிறப்பில் முடிந்ததோர் செயலால் இப்பிறப்பில் இறைவன் தடுத்தாட்கொள்வது முறையாதலின் அடிகள் முற்பிறப்பில் கண்ணப்பர் ஐவரில் ஒருவனாக இருந்தமையை மறவாது போற்றுகின்றார். முன்பிறவியால் உயர்வடைவதில் ஒரு வியப்பும் இல்லாமற்போகும் என்பதைச் சேக்கிழார் அறிந்து அதைக் குறிக்காமற் போகின்றார். சேக்கிழார் வில்விழவின்போது நடந்த உண்டாட்டினைப் பாட அடிகளோ கன்னிவேட்டையாடப் போகுமுன் நடந்த உண்டாட்டோடு, பூக்கொய்தலும் நீர் விளையாட்டும் பாடுகின்றார். அங்கு நடந்த வழிபாட்டினையும் திருமுருகாற்றுப் படையினை ஒட்டியுமே பாடிப்போகின்றார் சேக்கிழார். வேலனையும் வெறியாட்டையும் புனைந்துரைப்பதோடு தேவராட்டியையும் காட்டி அவள் அச்சநிலையில் ஆண்டவனை வழிபடுவதையும் புகழ்ந்துரைக்கின்றார். வேலனின் வேறாய், தன்னுடைய உயர்வாலே சிறந்து விளங்கி, அறவோரைப்போல, மாவுரி உடுத்துக் காட்டிலே வாழ்ந்து, கடவுளர் உள்ளம் களிக்கச் சிறப்புச்செய்து பலியூட்டிக் குறியாடும் தேவராட்டியைச் சேக்கிழார் கொண்டுவந்து புகுத்துகின்றார். வழிபடு மறையவரைக் கூறாது, தேவராட்டியைக் கூறுகின்றார் சேக்கிழார். அடிகளோ தேவாளனையே கொண்டுவருகின்றார். அச்சநிலை வழிபாட்டிற்கும் அன்புநிலை வழிபாட்டிற்கும் உள்ள வேற்றுமையை வற்புறுத்துகின்றிலர். அடிகள் உண்டாட்டுப் படலமும், பூக்கொய் படலமும், நீர் விளையாட்டுப் படலமும் கூறியதோடமையாது, கருவுற்றோர் நிலைமை கூறும் மருத்துவப்படலமும், பிள்ளையின் அருமை கூறும் அறநூலும், பிள்ளைத்தமிழும் காட்டுப் படலமும் நகரப்படலமும் பாடிப்போகின்றார். இப்புராணத்தில் இவர் பாடியவை இரண்டு சருக்கமேயாதலின் தம் கைத்திறமனைத்தும் காட்ட இவ்வாறு விரைந்துரைத்துப் பாடுகின்றார்போலும். மற்றொன்று விரித்தலாக இடையே புகுந்த இவை, கதையோடு ஒன்றாகிக் கலந் துறவாட இல்லை. வேட்டை கூறியதன் உள்ளக்கருத்தும் யாம் அறியோம். ஆனால் கூத்தரைப் போலப் பன்றியைப் பின்தொடர்ந் தோடியதற்கும் ஒரு பொருளில்லாமல் அடிகள் விட்டு விடவில்லை. நாகனது முதுமையையும் கூறார். திடீர் எனத் திண்ணனாரை அரசாக்கியதின் உட்கருத்தையும் தெரிவியார். கூத்தரைப்போல அடிகளும் நாகன் திண்ணனாரைப் பிரிந்து வருந்துவதனைத்தும் கூறுகின்றார்; தாய்படும் பாட்டையும் குறிக்கின்றார். கூத்தரைப்போலவே அடிகளும் கண்ணப்பரைக் கடவுளது திருவுருவத்தில் கலக்கப் பார்த்துவிடுகின்றார். சேக்கிழார் சேயடியை உவமையாகக் கொண்டதைவிட்டு அடிகள் தாய்முலை வருடும் குழவியை உவமை கொள்கின்றார். இவ்வுவமை தாயின் திருவாயில் சிறந்து விளங்குமேயன்றிச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய தொன்றாக உயர்ந்து விளங்காது. அடிகள் கூறும் புனைந்துரைகளும் வீறுகோளணியாக விளங்குதல் காண்க. பழைய புலவர்கள் வழக்கப்படி அடிகள் குழந்தை வளர்வதைப் பாடிப் போகின்றார். சேக்கிழாரோ புதியதொன்று புனைந்துரைக்கின்றார். வேண்டாம் என்று வீசி எறியப்பட்ட ஒடிந்துடைந்து ஒரு பயனும் இன்றி ஒருமூலையில் விழுந்து கிடக்கும் பொருள்களைச் சிறுபிள்ளைகள் எடுத்துத் தம் மனம் போனவாறு விளையாடுதலை இன்றும்காண்கிறோம். திண்ணனாரும் வேடர்கள் வேண்டாம் என்று கழித்தொதுக்கியகிழிந்ததோர் துடியினைக்கண்டார். அதனை உருட்டிக்கொண்டே ஓடினார் என்கின்றார் சேக்கிழார். "துடி குறடுருட்டி யோட்டி" என்று அவ்வாறு ஓட்டும்போது எழும் ஓசையும் பிறக்கப் பாடுகின்றார். உள்ளதை உள்ளவாறே அழகுபடக் கூறுவதில் சேக்கிழார் பாடிய கண்ணப்பர் புராணம் தலைசிறந்து நிற்கின்றதெனலாம். இதனினும் எண்மடங்கு இனிமையாக அடிகள் பாடி வைத்த கதையைப்பற்றி இவ்வாறு இயம்ப முடியுமோ? அடிகளும் இவற்றை எல்லாம் உணர்ந்துதான் கடை அன்பிற்கு எடுத்துக் காட்டும் அனலில் உருகும் அரக்கினைத் தாம் பாடிப்புகழும் அன்பிற்கு உவமையாகக் கொண்டார் போலும். இத்துணை வேறுபாடுகள் இருந்தாலும் இவரும் சேக்கிழாரைப் பின்பற்றி அவரது அருஞ் சொற்றொடர்களையும் அழகிய கருத்துக்களையும் தம்முடைய கதையினுள் பொன்னேபோலப் போற்றிப் பொதித்து வைத்துக்கொள்கின்றார். ஒத்த பகுதியை நோக்கினும் ஒவ்வாத பகுதியை நோக்கினும் சேக்கிழாரது தனிப்பெருஞ் சிறப்பு உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் நிலை நாட்டப் பெறுகின்றது.

உள்ளுறைப் பொருளாக வைத்துப் பாடிய பெரியோர்கள் தனிப்பாடல்கள் திருமுறைகள் சேக்கிழார் நூலுக்கு முந்தியனவாகும். பின் உள்ளுறையணி வரவும் உள்ளுறைச் சுவை ததும்பவும் பாடியவர்களாக நாம் எடுத்துக்காட்டிய புலவர்கள் அனைவரும் சேக்கிழார்க்குப் பல நூற்றாண்டு பிந்தியவர்களே ஆவர். அவர்களும் பல நூற்றாண்டுகளாகச் சேக்கிழார் பாடிய கதையினையே சிறந்த கதையாகக்கொண்டு பல வணியும் பல சுவையும் பயின்றுவரப் பாடியமை முன்னரே நாம் அறிந்ததொன்றே. குறைந்தது, கடந்த தொள்ளாயிரம் ஆண்டுகளாகப் பன்னிரண்டாந் திருமுறை என்று போற்றப்பட்ட இந்நூல் தன்னுயர்வை நிலைநாட்டி விட்ட தெனலாம். ஒருசிலரை எப்போதும் மயக்கலாம், ஒரு சிலபோது எல்லோரையும் மயக்கலாம்; எல்லோரையும் எப்போதும் மயக்குதல் இயலாதன்றே.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

காந்திமதி என்னும்
காந்தாரநாட்டுக் கட்டழகி.

(996-வது பக்கத் தொடர்ச்சி)

40. நானும் பெற்றேன்.

மடியிருந்த விடத்தினைப் போட்டித் தன் தமையனை மாய்விக்கும் வகைசூழ்ந்த விராடபத்திரன் அருந்துயர் ஆற்றுவான்போல் தழுவியபோது அக்கைகளோ அரசனை ஊழித்தீ தீண்டியதென்னச் சுட்டது. "நீளெரி நிரயத்துத் தோய்ந்து வந்தவோ நின கைகள்" என்று வேந்தன் விராடனை விலக்கித்தள்ளி விம்மலுற்றான். எழுவான், விழுவான், தரையினைத்தன் கண்ணீரால் மெழுகுவான், அழுவான் ஆனபோது சூழ்ந்திருந்த உழையோரும் அழுதனர், மரங்களும் அழுதன—விராடனும் அழுதான். இன்னவாறு மதிமாழ்கிக் கலுழும் மன்னவனை மடாதிபதி தன் மார்போடணைத்துக்கொண்டு, "கொற்றவா, குழைந்தகம் நைந்து கரைந்திடல். பெற்றவுன் பெறற்கரும் பிள்ளை எம்மனோர் நற்றவம் உண்மையேல் நண்ணி யெய்துவான். மற்றினிச் சிவன்செயல் வாய்க்கும், வருந்திடேல்" என்னுங்கால், அரசன் அவசமுற்று "ஆயின், இருள்காட்டுஞ் சுருள்குஞ்சி இழைக்கிழைந்து நுதலசைய, அருள்நாட்டத் திருநயனம் அழைத்தழைத்துப் புன்வினையேன் மருவோட்ட, மாமகனே மைந்தாவோ என்தாயே, உருள்பூட்டுத் தேரோடே உழைவந்து நிற்பாயோ!"......எனக் கரங்களை உயர்த்தி நெட்டுயிர்ப் பெறிந்து, "நில்லாதே போவாயேல் நிகிலத்தில் ஒருகாலம் கல்லேனும் வெந்தாலும் என்மார்பம் காயாது. நல்லானே சித்ராங்கா நகையோடே வந்திங்குச் சொல்லாயோ சொல்லொன்று உன்தாதை ஏழைக்கே;" என்று வாடினான். "சித்ராங்கா, நீயோ, தாயின் அன்பில் தழைத்தாயல்லை. மனையாள் காதல் திளைத்தாயல்லை. சேயின் இன்பம் தேர்ந்தாயல்லை. வாழ்க்கை நலங்கள் துய்த்தாய் அல்லை, ஆயுள் எல்லை எய்தா முன்னர் ஆவி துறந்து போவாயல்லை. புன்கண் தீர்ந்து வருவாய் வல்லை" என்று தேறினான் ஒருபோது. மீண்டுமவன், "செல்வாவோ சீமானே சித்ராங்கா நானுவி வாடுகின்றேன், பொல்லாதார் நின்பால் புரிந்த கொடுமாயச் சூழ்வினைகள் எல்லாந்தான் பொய்யாகப் போயிற்றென் றென்பாலே ஒல்லைவந்து சொல்லாயோ, சோகத்தைத் தீராயோ, மைந்தாவோ என்னரசே" என இன்னபல புலம்புவானாகிச் சோர்வடைந்து சாய்ந்து போனான்.

இந்நிலை அரசன் எய்தத்தான் இதுகாறுங் காத்திருந்த விராடன் உபசாரணைகள் செய்வான்போல் அங்குமிங்குமோடி விரைந்தான். 'பாலுளதேல் கொணர்மின்' எனச் சில ஏவலாளரைப் போக்கினான். 'தண்ணீர் கொணர்மின்' எனச்சிலரை அனுப்பினான், "மருத்துவரைக் கையோடு கொணர்மின்" எனச் சிலரைஏவினான், அருகிருந்து 'மைந்தனையும் அண்ணனையும் ஒருங்கே இழப்பதோ' என்று அழுங்கினான்போலப் புலம்பினான். "அண்ணா அரசே" எனப் பலகால் அழைத்து அவன் நிலை தெளிந்தான். "அடிகாள், உயிருண்டோ ஓதுமின், ஓதுமின்" என்று கேட்பான். விசிறுவான். அரசன் முகத்தில் நீர் தெளிப்பான். அவன் கைகளைத் தன் கைகளால் சூடுறத் தேய்ப்பான். மாந்தர் சூழ்ந்திருந்தால் அரசனது சோர்வு அதிகமே ஆகுமென்று விராடன் காவலாளர்களைக் கொண்டு அப்பந்தரில் அரசனைத் தாங்கியிருந்த மடாதிபதி தவிர மற்றவரை யெல்லாம் அகற்றிவிட்டான். இதற்குள் ஒருவன் பாலைக் கொணர்ந்து அவன் கையில் தந்திடவே, அதனை விராடன் வாங்கிக்கொண்டு ஒரு புறஞ் சென்று தன்னுடைய கொடும் பாவச் செயலுக்கெல்லாம் மகுடமணியாய் மறைத்து வைத்திருந்த விஷத்தைப் பெய்து அரசனுக்கு அயலே வந்து, "அடிகாள், இப்பாலை அருந்தினால் அரசன் களை நீங்குவான். நீவிர் சற்று விலகி வருமின்" என, மடாதிபதி "என்மேற் சாய்ந்திருக்கின்றான், ஆதலால் இப்படியே கொடுக்கலாமே" என்றனர். விராடன் முகஞ்சுளித்து நஞ்சு பெய்த பாலைக் கொண்டுவந்தான். அரசனுக்கு வாய் திறக்கவும் நினைவில்லை. "எனதருமை அண்ணலே, சற்றே வாய்திற, இதனை அருந்தி என்னை வாழ்விக்க வாய்திறவாய்", என்று பாலை வாயருகு ஒரு கையால் கொண்டுபோய் மறுகையால் வேந்தனது கன்னத்தை வருடி இதழ்களை நெகிழ்த்தினான் விராடன். பால் பெய்த அப்பொற் பாத்திரத்தின் ஓரம் கருகியிருக்கக் கண்டார் மடாதிபதி, சிறிது சங்கை கொண்டார். மன்னவன்வாயில் விராடன் பாலை வார்க்கப் புகுந்தபோது, அகிலாண்டேச்வர சுவாமிகள் தன்னை அன்றான் அகலப் போகும்படி சொன்னதையும் பொன்னிறம் மாறியதையும் சேர்த்து நோக்க, முதிர்ந்த ஐயமுடையவராய், "நில் நில் விராடா, இப்பாலினில் ஏதோ தீதிருப்பதாகத் தோன்றுகின்றது" என அவன் கைகளைப் பற்றி நிறுத்தினார். அவனோ "ஒன்றுமில்லை, அடிகாள், சற்றே இரும்" என்று கூறியவாங்கே அவர் பிடியினின்று தன் கைகளைக் கழற்ற முயன்றானேனும், அவர் பாத்திரத்தை வலிந்து தன் முகத்தருகு இழுத்து முகர்ந்தனர். அவ்வளவில் விஷத்தின் வேகத்தால் அவர் கண்கள் சுழன்றன. மயக்கங்கொண்டு ஆதனத்தின் மீது சாய்ந்தார். அவ்வாறு அவர் சாய்ந்ததால் அரசனது தலை நிலைமாறிக் கவிழ்ந்தது. விராடன் கைபட்டுக் கொட்டாதபடி பாற் கிண்ணத்தைச் சிறிது அப்பால் வைத்து அரசன் தலையை மேலுற நிமிர்த்தி, "வாய்திற, மன்னா" என்று அவன் நெற்றியை ஒரு கையால் துடைத்துக்கொண்டு மறு கையால் தனக்குப் பின்புறமிருந்த பாத்திரத்தை எட்டி எடுத்தான். அப்பொழுது இடியொன்று தன் கையருகே பாய்ந்ததுபோல் ஓர் உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று. துண்ணெனத் திரும்பினான். கடுவிசைச் சரம் ஒன்று கதுவிப் பாய்ந்து அக்கிண்ணத்தை உடைத்ததெனக் கண்டான். வெருவினன் விராடன், வெறித்து நோக்கினான். நோக்கிய கண்களால் தன்னுயிர்க்குக் கூற்றுவர் மூவர் ஒருங்கே வருவதைத் தெரியக் கண்டான். ஒருவன் கையில் ஏந்திய நெடுஞ்சிலை இன்னுந் தாழ்ந்திலது. பின்னுமோர் கணை தனக்குத் தேர்கின்றானோ அவ்வில்வலான், என்று அஞ்சுதற்கும் ஆற்றலில்லாமல் இவ்விராடன் மனம் பிதிர்ந்து நின்றான்.

இன்னவாறு இங்கு விராடபத்திரன் கைதவ வினைகளின் மகுடம் பங்கம்பட நேர்ந்தபரிசு உணர்வதற்கு, முன் பாலத்தைக்கடந்து இக்களத்தை நோக்கிப் பிரதாபதீரனோடும் விரைந்துவந்த வேந்தர் மூவரையும் நினைத்தல் வேண்டும். அன்னவர் தம் படைகளைப் பின்விட்டுப் பாலத்தைக்கடந்து இப்போர்க்களத்தைக் கருதி விரைவாராகி நண்ணுங்கால், வென்றி விளம்பிய வாத்தியங்கள் முழங்கக்கேட்டு அதற்குள் வெம்போர் முடிந்ததற்கு அதிசயித்தனர். குழுமிய ஜனங்கள் குழுறிய ஆர

வாரம் வெகு சீக்கிரத்தில் ஓய்ந்தது ஏன் எனப் பின்னும் வியப்பதிகரிக்க வேகமாய் வந்தவர், அரசன் அமர்ந்திருந்த விதானத்தருகில் யாவருமின்றி, அங்கு எங்குமே இரண்டொரு ஆட்கள் தவிர மற்றொருவரும் இல்லாது களமெல்லாம் இத்துணைச் சடுதியில் துறந்திருக்கக் காணலோடும், ஏதோ விபரீதம் இன்று நிகழ்ந்துளதென எண்ணினர். அரசனுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்த விராடனுக்குப் பின்புறமாய் இவர்கள் எய்தினராதலால் அவன் இவர்தம் வருகையை உணர்ந்திலன். மன்னனைத் தன் மார்பிற் சார்த்திபிருந்த மடாதிபதி மாத்திரம் வருபவர் யாவரென அறிந்து, அன்னர் கடிதின் வந்தங்கு அடைவதற்கு ஆவல் கொண்டிருந்தனர். வருமவர் இன்னுஞ் சற்றுச் சமீபத்தில் எய்தவும், அரசனது நிலையும், விராடன் செயலும் அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டன. "மைந்தனை இழந்ததை வேந்தன் இப்பொழுதே அறியலாயினன் போலும். மூர்ச்சனை யடைந்துளான்" என்று மணிவாளன் கூறக் கஜேந்திரஸிம்மன், "ஆம், நாம் கருதியவாறே இங்குக் கருமங்கள் நிகழ்கின்றன......இளவரசன் செய்தியை விராடன் அரசனுக்குத் தெரிவிக்காமலே இக்குன்றத்தவர் போரினை நடத்திவைத்துளான்......பிறகு நம் வேந்தனுக்கு எவ்வாற்றாலோ தெரிந்தது போலும்......நமக்கு விடுத்த ஆணையிற் பொறித்த பேரும் முத்திரையும் பொய்யே," என்றனன். "கழிந்தன கழிக. இப்பொழுது அவ்விராடன் யாது செய்கின்றான் என்பதையன்றோ நோக்க வேண்டும்," எனப் பந்தருள் நிகழ்வனவற்றை உற்று நோக்கினன் பிரதாபதீரன். பொன் வள்ளத்தில் ஏதோ வொன்றைப் பெய்து அரசன் அருந்தும்படி செய்கின்றான் விராடன் என்பது இவனுக்குத் தெரியலாயிற்று. தன்னுடனிருந்த மற்றவர்களுக்கு அதனையவன் காட்டவே, "மூர்ச்சனை தெளிய மருந்து ஏதேனுந் தருகின்றான் போலும்" என்று கூறிய மணிவாளனைக் கஜேந்திரஸிம்மன் மறுத்து, "அமுதத்தைத் தொட்டாலும் போதுமே இவ்விராடன், அது விடமாய் மாறாதோ......இம்மருந்து மன்னனுக்கு என்னும் !" என்னுங்கால், "மற்றிது விடமே தானோ, யாதோ" எனக் காஷ்மீரத்தரசன் இயம்பினன். "வேந்தே, உனக்கு உற்ற ஐயம் அங்கு நம் மடாதிபதிக்கும் உற்றதென மதிக்கின்றேன். அதனை அவர் முகர்ந்து பார்க்கின்றார், பாருங்கள்" என்று மணிவாளன் உரைப்பதனின் முன்னே, "ஐய, அவர் மயங்கிச் சாய்கின்றார், விடமே யது ! படு கொலை படு கொலை ! நடக்கின்றது" என்று கஜேந்திரஸிம்மன் கூவினன். மற்றிதற்கு என் செய்வதென நால்வருந் திகைத்தனர். "அட, உயிர்க்கள்வா, நில் நில்!" எனக் கூவுதற்கு வாயெடுத்தான் கஜேந்திரஸிம்மன். அவனை, "வேண்டா, நாம் வருவது தெரிந்தால் தன் காரியத்தைக் கடிதின் முடித்து விடுவான், கூவவேண்டா" எனப் பிரதாபதீரன் தடுக்க, விராடன் அங்குப் பாத்திரத்தைக் கீழேவைப்பதை இங்கிருந்தவர் கண்டனர். கண்டவர் அவன்தன் தீயசெயலை ஒழித்தானென்று எண்ணுமுன், அரசனது முகத்தைத்திருப்பி மீண்டும் அப்பாத்திரத்தை எடுக்க முயல்கையில் "கெட்டது குடி" என்று கஜேந்திரஸிம்மன், பிரதாபதீரன் தோளிருந்த வில்லை வாங்குவதற்குப் பற்றினன். அப்பொழுது பிராதாபதீரன்," மன்னா, சீற்றத்தால் பதறிய நின் கை எய்யும் கணை யார்மீது பாயுமோ! அன்றியும் விராடன் கொடுந்தொழில் புரிகின்றான் என்று நாம் இவ்வளவு தூரத்திலிருந்து எண்ணி அவனைக் கொன்றுவிடுவது நேரிதன்று" என்று தானே வில்லைவளைத்து விராடன் கையிலெடுத்த பாத்திரமே குறியாகக் கடியவேகக் கணையொன்று தொடுத்தனன். தானையந் தலைவன் பிரதாபதீரன் வைத்த குறி இது காறும் விலகியதில்லை. விடமிருந்த கிண்ணமும் விராடன் எண்ணமும் சிதைந்துடைய எய்தவாளியைத் தொடர்ந்து அவர்களும் எய்தினர்.

இன்னநிலையில் என் செய்வதென்று ஆய்ந்துகொள்ள விராடனுக்கு நேரமில்லை, மனமும் இல்லை. வருமவர் காலில் விழுந்து தன்பிழை காக்குமாறு வேண்ட எண்ணினன் ஒருபோது. வழிந்தோடும் விஷப்பாலை நக்கியே மாய்வது நன்றென மதித்தான் மறுபோது. மற்றிவ்விரண்டுஞ் செய்யாது பின்னுமோர் மாயச் சூழ்ச்சியால் தப்புதற்கு வழியில்லையோ என்னுமொரு எண்ணமும் இடையே உழன்றது. அன்னவன்முன் மன்னர் மூவரும் பிரதாபதீரனும் வந்து நின்றனர். நின்றவரை விராடன் நெடிதுநோக்கி, "அண்ணல் எம்மரசின் ஆணைகடந்து ஈண்டுநீர் எய்தத் துணிந்த தென்! மைந்தன்தன் உயிரைக் குடித்தது பற்றாதென்று தந்தையின் உயிரிற்குந் தாகங் கொண்டீரோ ! ஒளிந்துநீர் எய்த அம்பு ஈசனருளால் இலக்கு இழந்தது......" என்று கூசாது கூறிய உரைக்குப் பதிலாகக் கஜேந்திரஸிம்மன், கூறியவன் பல்லிரண்டு தரையிற் சிந்தத் தன் திண்ணிய கரத்தால் தாடையிற் புடைத்தான். தன் வாய்ச் சொல்லிற்குப் பதில், வந்தவர் கை பேசும் என எதிர்பாராத விராடன் உடல் நடுங்கி மதிகலங்கி உதிரம் ஒழுகிய வாயோடும் அரசன் மீதுபோய் விழுந்து, "ஐயகோ, என் கண்முன்னே அண்ணனை நீர் கொல்லச் சகியேன்! அண்ணா! அண்ணா! எனதருமை அரசே! நின்னைக் கொல்லிய வந்துளார் இக்கொடுமைகூர் அரக்கர்! எழுந்திராய், எழுந்திராய்—பாதகர்காள், என்னைக் கொன்றபின் வேண்டுமெனின் நுங் கொடுந்தொழிலை முடித்துக்கொண்டா லாகாதோ!—மன்னா கண்மலர்ந்து ஒரு சால் நோக்காய். நினது அருளொழுகும் விழியின் பார்வையேனும் இக் கொடியோர் கன்னெஞ்சில் இரக்கந் தூண்டலாம்," என்று கதறவே, இக்குரல் கேட்டுக் காவல் சேவகர் நாலவர் ஓடி வந்தனர். "வீரர்காள், நுமதரையனைக் கொலையாடப் போந்துளார் இப் பேராசைப் பேய்கள், பற்றுங்கள், பற்றுங்கள் !" என விராடன் உரைக்க, அவ்வகை அவர் பற்ற முயன்றபோது பிரதாபதீரனும் கஜேந்திரஸிம்மனும் அவர்களைத் தம் வாளினைக் கழற்றி அதன் உறைகளால் நையப்புடைத்துத் துரத்தினர். இதற்குள் மணிவாளன், அரசன்மேல் விழுந்தழும் கள்வனை விலக்கப் பற்றினன். அவனோ வேந்தன்தன் மெய்யினைப் பிணிவிடாது தழுவிக் கொண்டு, "வேண்டா, இப்படு கொலை புரியாதீர். விடமிட்டு மாய்க்கப் பார்த்தான் மன்னனை, உங்களுடைய சூழ்ச்சியில் சேர்ந்த ஓர் மடாதிபதி. அவன் தன்வினைக்குத் தானே இரையாய் இதோ மாண்டுகிடக்கக் காண்மின்......அண்ணா ! கண் திறந்து இக்கொலைஞரைக் காண்பாய், காண்பாய்" என வேந்தனைக் குலுக்கினன். இதனால் அப்பார்த்திபன் ஒரு வண்ணஞ் சோர்வு நீங்கிக் கண்களைச் சிறிது திறக்கலாயினன். ஈதறிந்த விராடன், மடாதிபதியைக் காட்டி, "அண்ணா, இப்பாதகன் உனக்கு வைக்கவந்த நஞ்சினின்றும் காத்தேன். அதன் முன் இக் கொலைஞரும் நின்னைக் கொல்லிய வந்தனர். அவர் எய்த அம்பை நோக்குதி. கையிருக்குங் கத்தியை நோக்குதி. தடுத்து நின்ற என்றன் தாடையை நோக்குதி" என்று பலவாறு உரைபதறி அவனைத் தழிஇ அணைத்தெடுத்து நிறுத்தினன். இதற்குள் முன் கஜேந்திரஸிம்மன் அடிப்பதற் கஞ்சி ஓடிய சேவகரும் மீண்டனர். அவர்களையும் விராடன் காட்டி, "யான் இயம்பியதற்குக் கரிகளும் இதோ இருக்கின்றனர்," என்றான்.

கண்டதொன்றும் வேந்தனுக்கு விளங்கவில்லை. தன்னொரு மாமகன் மாண்டான் என்ற நினைவோடு சாய்ந்த அவன் எழுந்தபோதும் மீண்டும் அந்நினைவே மூண்டது. கண் திறந்தும் அவன் எதிரிருப்பவர்களைக் கண்டிலன். செவியிருந்தும் விராடன் சொன்னதைக் கேட்டில. சித்ராங்கன் நினைவு தன் உள்ளத்தையும், தழுவிய தன் தம்பியின் கைகள், மெய்யையும் சுட்டு வறுத்தன என்பதொன்றே அவனது உணர்ச்சிக்கு உரியதா யிருந்தது. அன்னவனை வணங்கினால் அருகிருக்கும் விராடனையும் வணங்கியதாகுமென வெறுத்துக் கஜேந்திரஸிம்மனும் மற்றிரு மன்னரும் வணக்கஞ் செய்திலர். பிரதாபதீரன் மாத்திரஞ் சென்றடி வணங்கினன். அவனை எதிரே கண்டதும் அரசனுக்குத் தன்னினைவு சிறிது வரப் "படைத்தலைவ, நீ சென்றும் எங்கோமகனைக் காக்க இயலாமற் போயிற்றோ" வென்று கதறினன். "அரசே, யானெங்கும் சென்றதில்லையே," என அவன் வியப்புடன் எதிர்விளம்ப, மன்னன் விராடனை நோக்கினன். அவனும், "அண்ணா யான் இது காறும் குறித்த தொன்றும் நீ உணர்ந்திலை போலும்... இவன், மன்னர் மரபிற்கே பழியாகப் பிறந்த இவ்வேந்தர் மூவர், நம் மடத்திற் கதிபதி யென்ற அக்கொடியோன், ஐவரும் ஒன்றுசேர்ந்து நம்மைக் குலத்தோடும் தொலைத்து இக்காந்தாரநாட்டைத் தம்முள் பகிர்ந்து கொள்வதென ஒரு பெருஞ் சதிச்செயல் சூழ்ந்துளார். ஆகா! நம்பி நம்பி நான் கேட்டேன்......இச்சதிக்கு முதல் இரையாய் நம் இளவரசன் ஆயினன். அது தீர்ந்ததும் நீ மயங்கிச்சாய்ந்த சமயம்பார்த்து உனக்குப் பாலோடு விடமூட்ட முயன்றான் இவ்வகிலாண்டேச்வரக் கயவன். அதனை நான் தடுக்கப் புகுந்தபோது அவன் உதட்டில் தெறித்த ஒரு துளி நஞ்சினால் இதோ மயங்கிக் கிடக்கின்றான் ..இல்லை, இல்லை...பாவிகள் உயிர் சீக்கிரத்தில் போகாது...அதற்கிடையில் நீ இட்ட சோறுதின்ற இவ்வஞ்சகன் மறைவிரிந்து உன்மேல் ஒருபாணம் தொடுத்தான். வாழி மன்னா, குறிதவறி அதுவும் இதோ விழுந்துகிடக்கின்றது பார்! உடனே காஷ்மீரத்தரசனும் கஜேந்திரஸிம்மனும் மணிவாளமன்னனும் உருவிய கத்தியோடு உன் மீது பாய்ந்தனர். இடைபுகுந்து தடுத்த எனக்குற்றதைப் பார். நமக்குத் துணையாக இச்சேவகர் சிலர் வந்தனர். அவர்களையும் இவர் துரத்தி யடித்தனர்......இன்று காலையில் நானுனக்குச் செப்பியதெல்லாம் உண்மையேயாயிற்றன்றோ!" என்று தான் கட்டிய பொய்யின் கற்றையை அவிழ்த்து உதறினன்.

"விராடா, என் மைந்தன் வருவானென்றும் கூறினையே, அது வொன்றுதான் பொய்யாக வேண்டுமோ!" என்று விச்வகேசரி நெட்டுயிர்ப்பு வீங்கவே, தான் செப்பியது எதுவும் வேந்தனது மனதை அசைக்காததற்கு ஆச்சரியத்தோடு சினமும் கொண்டான் விராடபத்திரன். ஆயினும், "என்செய்வேன், அண்ணா, நம் விதி இருந்தவாறு இது. அதுவொன்றே மெய்யாகாதபடி இந்தப் படுகொலைஞர் புரிந்துவிட்டனரே"என அவனும்பெருமூச்சு விட்டான். வெறுப்பிற்கிடமான இவன் சாகசத்தை யாரும் வியந்திலர். "அட" விராடா. உன் வஞ்சகச் சொல்லுஞ் செயலும் எத்தனை காலமடா, செல்லும் என்று எண்ணினாய்! எம் சித்ராங்கனை மாய்வித்த பாதகா, உனக்கேயும் பயனிலாது போயிற்றடா அக்கொலை. இவ்விச்வகேசரியே யன்றி அவ்விச்வநாதனே தடுத்தாலும் உன் புன்தலை துணிக்காமல் இனி நில்லாது என் கை வாள்" என்று கஜேந்திரஸிம்மன் தன் கரத்தை ஓங்கினன். அச்சமயத்தில் அரசன், "பிரதாபதீர, எம்முன் இது நிகழ நீ பார்த்து இருத்தியோ" என்னலும், சேனைத்தலைவன் கஜேந்திரஸிம்மனது கரங்களைப் பற்றி நிறுத்தினன்.

T. N. சேஷாசலம்

பொய்யாற் பொலிவது புலமை.

A Chapter from "Intentions"

By

Oscar Wilde

(993-ம் பக்கத் தொடர்ச்சி)

[நண்பன் கேட்டபடி, விவியன் தனது வியாசத்தைத் தொடர்ந்து படிக்கின்றார்.]

விவியன்:-நண்பா, கேள்! உன் மனத்திலேபிறந்த இல்லாத பொருளின் தன்மையை, உனது மனோபாவம் கற்பித்தபடி, மாந்தர் மனமும் அவர் மனமொடு மெய்யும் களித்துய்யுமாறு அமைத்தலே கலை. இத்தகைய நூலொன்றிற்றான் கலைத்தெய்வம் அமுத கலசத்துடன் உதயமாகின்றாள். பின்னர் மதுநாடி மலர்புகும் வண்டேபோல், அமுத சுரபி நாடிக் கலைத்தெய்வம் வளர்ந்திகழ் கோயில்கொண்டு வாழ்க்கையும் செல்கின்றது. தெய்வமகள் கலைச்செல்வி, தன் வாயிலடைந்து வாழ வருவோர்க்கு இடையே கதவடைத்துத் தாளிட்டு விடுவதில்லை. மலர்க்கை நீட்டி முகமன்கூறி வரவேற்கின்றாள். ஆனால் அச்சந்நிதியில் பணியாளின் பதவியைத்தான் பெறுகின்றது சிலர் வாழ்க்கை. மற்று அப்பெருந்தகைத் தெய்வம் எழில்வடி விலங்கக் காட்சி தந்து நம்மைத் தன் பரிசனமாய் அமர்த்திக்கொண்டாலன்றோ பெருவாழ்வு பெற்றவராவோம். ஆயின் அவள் திருமுன்னர் வாழ்க்கை புது எழிலை, புது உடையை, புத்துருவைப் பெறுகின்றது. பின்னர் வாழ்க்கை இழப்பது அதன் மெய்த்தத்துவத்தை. அது செய்வதும் புதியது. பேசுவதும் உண்மையோடமையாப் புது பாஷை. இதுவரை எல்லாம் சரியாகத் தானிருக்கின்றது. வந்துறும் ஆபத்தெல்லாம் இனிமேற்றான். பணியாளாய்ப் பரிசனமாய் வந்தமர்ந்த வாழ்க்கை மெல்லமெல்லத் தலைதூக்கிக் கலைத்தெய்வத்தைப் பணிகொள்ள முற்படுகின்றது. வாழ்க்கையின் கொடுங் கோன்மைக் காற்றது அவளும் அகன்றுவிடுகின்றாள். பின் என்? நாம் நூல்களில் காணுவது கண்ணைப் புண்ணாக்கும் உண்மை வாழ்க்கையெனும் சிறுமை. தனது பழைய ஆபாஸ அபஸ்வரக் கோலத்துடன் அதுவிவகரிக்கத் துவக்குகின்றது. நமது நாடு இதுபோது அடைந்துள நிலை இதுவேயாகும். இந்நிலையில் நாமும் நமது உணர்வும் உய்யுமென்று கருதுவதற்கிடமில்லை. சிறிது ஆய்ந்து பார்ப்போம்.

ஆங்கில நாடக இலக்கிய சரித்திரத்தைச் சிறிது நோக்குவோம். பண்டைக்காலத்தில் நாடகங்கள் மதாசாரியார்களின் கையிலிருந்தது. நான் முன்னர்க் கூறிய வண்ணம் அப்பொழுது தன்மை அலங்காரம்தான் (Abstract Decoration) அவர்கள் செய்தார்கள். அவர்களது பாத்திரங்களும், ராக்ஷஸனும், பூதங்களும், பா

மாத்மாக்களு மாயிருந்தன. அதாவது, இல்லாதன, உயிர் பெற்று விவகரித்தன என்பது. பிறகு நாடகத்தினிடை வாழ்க்கை மெள்ளமெள்ள வந்து புகுந்தது. ஆனால் வாழ்க்கை பின்னிடமே பெற்றது. நூல்களில் பொலியும் மாந்தர்கள் செய்யும்கருமத்திற்கும், நடையுடைபாவனைக்கும் தினசரி வாழ்க்கைக்கும் சம்பந்தம் இல்லை. கலைத் தெய்வத்தின் கோலே உயர்ந்திருந்தது. பாத்திரங்கள் வண்ணாத்திப் பேச்சும் பேசவில்லை. அவர் உறும் துக்கமும், படும் சந்தோஷமும், கொள்ளும் கோபமும் புதியன. அவைகள் உடுத்திய ஆடையும் புதியது. உரோமாபுரிசீஸரும், எகிப்து நாட்டு நங்கை கிளியோபாத்திராவும் உரோமாபுரியிலும் எகிப்திலும் புத்துயிர்பெற்று நடமாடினர். இதுவரை எல்லாம் நன்றே. மிகைபடக் கூறலே கலை. இருப்பதை ஆய்ந்து தேடி, இல்லாவகைச் செய்துவைத்தல் சுவையுடையதே. சுவைதரும் ஒன்று கலைதான்.

இத்துடன் நின்றால்குறைசொல்வதற்கொன்றுமிராது. மெள்ள மெள்ள வாழ்க்கை எல்லைகடந்து வெளிவரத் துவக்கிவிட்டது. பொய்யும் தேயத்துவக்கியது. ஷேக்ஸ்பியர் மஹாகவியை எடுத்துக்கொள்வோம். அவரது பின்னைய நாடகங்கள் முடிவில் துவக்கமாய் அமைந்தன. (ஷேக்ஸ்பியர் தனது ஆற்றலால் வாழ்க்கைக்கு அழகு தந்தார் எனினும் அவர் கொஞ்சம் கொஞ்சமாய் வாழ்க்கையையும், மனித இயற்கையையும் வழிபடத் துவக்கிவிட்டார். அவர் மேதையாதலால் அவரது நாடகம்வரைக் கேடொன்றும் ஏற்படவில்லை. அவரைப்பின் தொடர்ந்தார் மனித இயற்கையென்று இயற்கையாம் படுகுழியில் விழுந்து விட்டனர். அவர்கள் விழுந்தாரே ஒழிய ஷேக்ஸ்பியரின் சிருஷ்டி வல்லமை கலையாற்றல் முதலிய பெறவில்லை. எனவே எல்லாம் கெட்டுப் பர்னார்ட் ஷாவின் நாடகத்தில் வந்திறங்கி விட்டது என்று பொருள்படக் கூறுகிறார் ஆஸ்கார் ஒயில்டு)

ஷேக்ஸ்பியரும் வரவர வசன நடையில் இறங்கினார். கண்ணாடிப் பிரதி பிம்பம்போல் இயற்கையை உள்ளது உள்ளபடி நூலில் காட்டுவதே முறை என்ற அபவாதம் பெருகிற்று. நாடகமும் வீழ்ந்து விட்டது. நாவல் நூல்களும் இந்நிலையையே அடைந்தன. இன்னும் இயற்கை புகாதிருப்பது கீழ்நாடுதான். ஆகவே கலைக்கு இடம் வாழ்க்கையன்று.

வொர்ட்ஸ் வொர்த் தவிர்த்த மற்றக் கவிகள் நம்ப முடியாதபடிதான் எழுதி வந்தனர். வாழ்க்கையையும் இயற்கையையும் கையாண்டார் எனினும் உண்மையில் விழுந்து விடவில்லை. டீ போ என்பானின் உண்மை நூலிலாகட்டும், பாஸ்வெல் என்னும் சிறந்த சரித்திரகாரன் செய்த டாக்டர் ஜான்ஸனது வாழ்க்கைச் சரித்திரத்திலாகட்டும், உலகமேவியந்த வீரர்திலகன் நெபோலியன் எழுதிய கடிதங்களிலாகட்டும், பேரறிஞன் கார்லைல் எழுதிய பிரான்ஸின் புரட்சி என்னும் நூலிலாகட்டும், விஷயநிகழ்ச்சிகள் அவைகளுக்குரிய இரண்டாவது ஸ்தானம்கொடுக்கப்பட்டமையாற்றான் இன்னும் அவைகளில் புதுமையும் சுவையும் இருக்கின்றன. உண்மை விஷயங்கள் தலைதூக்கி நிற்கு மிடங்களில் கதைச்சுவை பறந்தோடிவிடும். பிறகு அதன் கதி வர்த்தமானப் பத்திரிகைதான், நிகழ்ச்சிக் குறிப்பேடுதான்.

இப்பொழுது எல்லாம் மாறி விட்டது. கவிதையும், கதையும் இருக்குமிடம் தெரியவில்லை. எனவே மனிதஜாதி பாதை கடந்து சிறுமையான பாதையில் நடந்து வருகின்றது. இன்று அமெரிக்கா உற்ற நிலையென்ன. அதன் வியாபாரப் பெருக்கமும், உலோகாயதக் கொள்கையும் வளர்ந்து மாந்தர்மனம் பாலையாய்ப் பாலைவனமாய் உலர்ந்து வருகின்றது. காரணம் என்! 'எனக்குப் பொய்சொல்லும் திறமையில்லை என்று நாணுதவாய்விட்டுச் சொல்லிக்கொண்ட வாஷிங்டனைத் தனது வீரனாக அமெரிக்கா கொண்டதால்தான் இந்நிலை வந்ததும். போதனை நூலையும் நான் ஏற்பதில்லை; என்றாலும், வாஷிங்டனும் உண்மையும் வாழ்க்கையும் பெருக்கிவைத்த தீமை, மதபோதனை நூல்களாலும் செய்து வைக்க முடியாது.

நண்பா! நான் சொல்வது வேடிக்கையன்று. உண்மையைத்தான் கூறுகின்றேன். இதனால் நம்பிக்கையில்லாதவன் நான் என்று கடியாதே. நமது நாடும் அமெரிக்காவும் மீளாது விழுந்துவிட்டது படுகுழியில். என்றாலும் இன்னும் சிறிது நம்பிக்கை என்னிடம் இருந்தே வருகிறது. இனிக்கூறுவேன்.

நடக்கின்ற ஆண்டு முடியுமுன்னம் நம் நாட்டுநிலையில் மாறுதல் சில ஏற்படுமென்றே கருதுகின்றேன். அதிற் சந்தேகம் சிறிதுமில்லை. கதைச்சுவை யிலாமையிலும், மிகைபட வுரைக்கும் தன்மை யிலாமையாலும், நடந்ததை ஞாபகத்தினின்று சாக்ஷியங்களுடன் எழுதியுள்ள வாழ்க்கைச் சரிதைகளாலும் தளர்ந்த மாந்தர் மனம், இன்று இல்லாவிடினும் நாளையாவது இழந்துள தலைமகனை,—மனம் கவரும்வகை பொய்சொல்ல வல்ல பெருமகனை—தேடியடையும். ஒருபகல் உதயத்தில் மலைக்குகைநண்ணி, அங்கு வைகிய இராக்ஷஸ ஸர்ப்பத்தை வெளியே கொண்டுவந்து ஓடியால் கொன்று போட்டவன் யாவன் என்பதை நமது சரித்திர காரர்களாலும் ஆராய்ச்சி நிபுணர்களாலும் இப்பொழுது சொல்லமுடியாது. அவன் யாவனாயினும், எந்த வகுப்பினனாயினும் சரி, அவன்தான், நாகரிகத்தை உலகிற்குத் தந்தவன். அப்பெருமகன் சொன்னதுபோல், வானத்தில் திரிந்தலையும் விமானத்தைச் செய்துளோம் என்று மகிழ்ந்திடும் பூதபௌதிக சாஸ்திரிகள் ஒரு வார்த்தை சொல்லத் தைரியந்தானிருக்கின்றதா? கேட்கின்றேன். முன்னவன் நோக்கம், நமக்கு இன்ப அனுபவத்தைத் தந்து உள்ளமுமெய்யும் களியுறச்செய்வது. அவன்தான் சமூகத்தின் நாகரிக வளர்ச்சிக்குத் தளரா நிலைக்களம். அத்தகைய ஒருவன் இல்லாத விருந்துதான் சிறக்குமா? பிரபுக்கள் வீட்டுப் பெருவிருந்தானாகட்டும்; கோக் குமரர் குழாமாகட்டும், நூலாசிரியர் கூட்டமாகட்டும், சுவையிராது? வேண்டாவெறுப்பாய் உட்கார்ந்தே பேசித் தொலைப்பர்.

அத்தகை ஒருவன் இருப்பான். பொய்யுரைபுனைந்து ஒருநாள்வருவான். உண்மை சொல்லல் என்னும் கொள்கைவிட்டு வெளியேறி இடுகை நீட்டி அவனை வரவேற்பர். அவன் மலரடிபடிந்தமைவர். பொய்தவழும் அவன் அதரத்தைச் சுவைத்து மகிழ்வர். கலை என்பது பொய்யான ஒன்றைச் சொல்லும்வகையில் இருக்கின்றது. எளிய வாழ்க்கையும் வண்ணாத்தி அனுபவச் சிறுமையும், சாத்திரமுறை வழுவாச் சரித்திர மென்னும் நடக்கைக் குறிப்புக்களும் கலைகள் அல்லஎன்பதைத் தெரிந்து கொண்டு, அப்பெரியான் வழிபற்றி, பொய்யைத் தங்களா லியன்றவாறு சொல்லிப்போவர். இது சாதம்.

இவ்வளவு சீக்கிரத்தில் மனித இனமே இப்படி மாறிவிடும் என்று நீங்கள் கொள்ளவேண்டா. நூல்மதித்துத் தரம்பார்க்கும் மதிவல்லார் (Critics) ஒருவர் இருவர் இருக்கத்தான் இருப்பார். அவர், ஸாட்டர்டே ரெவ்யூ (Saturday Review) பத்திரிகையில் 'பொய்யா லான கட்டுக் கதைகளில் (Fairy tales) வாழ்க்கைப்பொருத்தமும், சாஸ்திரசரித்திரப்பொருத்தங்களும் இல்லையென்று கூறிப் பழிப்பார் என்பதை அறிவேன். தங்களுக்குச் சான்றாகப் பவளத் தீவையும், அதில் முழவொலி செய்யும் அரக்கர்களையும் (Titons), அம்முழவொலியைக் கேட்கும் கலிபன், ஏரியல் என்பவர்களையும், அவர் தலைவன் பிராஸ்பீரோவையும் சிருஷ்டியால் படைத்துப் பொய்யால் வினைசெய்யச் சொல்லிய கவிநாயகனைக் கூறுவர். (ஷேக்ஸ்பியர்) இயற்கையைக் கண்ணாடியால் பிரதிபிம்பிக்கச் செய்தல் (Holding the mirror up to Nature) என்று ஹாம்லெட்டு ஒருசமயம் கூறிய வாசகத்தை விடாது பிடித்துக் கொள்வர். அவர்கள் அவ்வாசகத்தின் கருத்தை அறிந்தாரில்லை. அதைச் சொல்லியவன் ஷேக்ஸ்பியரல்லன். பைத்தியக்காரன்போல் நடித்த ஹாம்லெட்டு. கவியின் கூற்றாயின், அவன் பவளத் தீவையும், அரக்கர்களையும், மந்திரவாதியையும் நூலுக்குள் புகுத்தி யிருக்க மாட்டான். தனது பைத்திய வேடத்தை, மெய்ப்பிக்க ஹாம்லெட் கூறிய கூற்றே அது. ஆகவே, ஷேக்ஸ்பியர் இயற்கைத் துன்மார்க்கத்தைப் பரிகசிக்கவே செய்கின்றானல்லவா?

[இச்சமயம் இதை ஏற்காதவன்போல் ஒரு நகையொன்று நகைத்துச் சிரில் 'நண்பா, அப்படியா' என்று கூறித் தலையசைத்தனன். இதைக்கண்ட விவியன் கூறுவான்.]

விவியன்:—நண்பா, நீ என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள்ளலாம். ஷேக்ஸ்பியர் 'இலக்கியம் இப்படியிருக்க வேண்டுமென்று கூறிய கூற்றல்ல அது வென்பதையாவது ஏற்கமாட்டாயா? 'தந்தையைக் கொன்று தனியரசாளும் கள்வனைஎன்ன செய்வது' என்றுவிளங்காதுழலும் ஹாம்லெட்டுச் சொல்லிவைத்த தீர்மானமில்லாப் பாதி வாசகம். இதை ஷேக்ஸ்பியர் கூறுமொழியெனக் கொள்ளல் அறியாமையே யாகும். துஷ்டன் ஐயாகோ (ஷேக்ஸ்பியர் எழுதிய ஒத்தலோ என்னும் நாடகத்திலுள்ள ஒரு பாத்திரம்) சொல்லிவைத்ததெல்லாம், மாந்தர் ஏற்கவேண்டிய உபதேசம் என்று நாம் கொள்ளாததுபோல், இதையும் ஷேக்ஸ்பியர் கூறிவைக்கும் வாய்மையெனக் கொள்ளுதல் கூடாது. சிறிது இடைமறிக்காதிருப்பாயாயின், நான் சொல்லவந்ததை முடித்து விடுகிறேன்.

கலை தனது முழுமையை (Perfection) அடைவது தனக்கு வெளியிடத்திருந்தன்று, தன்னிடமிருந்தே யன்றோ! இயற்கைக்குப் புறமிருக்கும் தோற்றத்தினின்று அப்பெருமகளைப்பற்றி மதித்தல் மதியாகாது. கலைத் தெய்வம் வேளியெலாம் தன்னுள் காட்டும் கண்ணாடியன்று. அவள் இரகசியத்தை மூடிவைக்கும் திரையே யாவாள். (She is a viel rather than a mirror). எவ்வனமும் அறிந்திராத மென்மை மலர்களை அவள் மலர்ந்துளாள். எப்பொழிலும் புகுந்திராத புட்களை அவள் வளர்த்துள்ளாள். புதிய புதிய உலகத்தை அவள் ஆக்குகிறாள், மறுபொழுது அழிக்கிறாள். அவள் திருவிளையாடல் திறமறிதல் அரிது அரிது. வானுலவும், வெண்மதியை கீழே இழுத்தெறிவாள், அல்லது இன்னும் உயரம் போகும்படி செய்வாள். அவளது தன்மையை நாம் தெரிய முடியாது. அழியும் மனிதனைக் காட்டிலும் அழியாத உண்மை அவளிடத்தில் இருப்பதால் கலை உண்மை கண்ணால் பார்க்கும் இயற்கையின் அரைகுறைத் தோற்றத்தில் இல்லை. கலைக்கு விதியில்லை. பொருத்தம் என்பதில்லை. முரணே அவள் தத்துவம். அவள் செயற்கரிய செய்வாள். அரக்கர்களைக் கூவி அழைப்பாள். அவர்களும் அவள் அடி பணிந்து நிற்பர். இலை உதிர் காலத்தில் அவள் விரும்பினால் மரம் தளிர்க்கும், எழிலுடன் மலரும். கொடிய கோடையில் பனி மாரி பெய்து அவள் நடக்கு மிடமெலாம் வெண்துகில் விரிக்கும். அவள் கூறும் ஒரு வார்த்தை போதும். குகையினின்று கொடிய சிங்கம் பசுவென வந்து, நாயென அவள்பால் விளையாடி அமையும். வான் வாழ் தேவர்களும், மற்றவரும் அவளைவழிபடுவர்' அறிவாய் நண்ப, இன்னவை அவள் பெருமை.

ஸிரில்:-நண்பா இவ்வளவுதானா? இன்னும் உளதோ?

விவியன்:—இன்னும் சில சொல்லவுளது. இனிக் கூறுகின்றேன்.

K. இராஜகோபாலன்.

உற்ற யாக்கையின் உறு பயன் என்?

திருச்சிற்றம்பலம்.

குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வா யிலகுமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப் பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

வார்கடலுலகில் கடவுளால் தோற்றுவிக்கப்பட்ட பலவகைப் பிறப்பினுள் மானுடப் பிறவியே பெறுதற்கரிய பிறவியாம். ஏனெனில், நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பினுள்—அதாவது அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றமும், தேவர், மானுடர், விலங்கு, பறவை, ஊர்வன, நீருறைவன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பும்—புல்முதல் பல்பிறவியெடுத்து இப்பிறவிகளில் செய்த நல்வினையின் பயனாக, மானுடப்பிறவி யெய்தலானும், இம்மானுடப் பிறவியே பகுத்தறிவுடைமையும், தன்னைத் தோற்றுவித்த இறைவனொருவ னுளன்என்னும் உணர்வும் உண்டாதற்கு ஏதுவாயிருத்தலாலும் மற்றப் பிறவியிலும் மானுடப் பிறவியே மிகச் சிறந்ததாகும்.

இனி, மானுடப் பிறவியினும் சிறந்ததென்று எண்ணப்படும் தேவப்பிறவியும், இம்மண்ணுலகத்தில் மானுட யாக்கை தாங்கியே கடவுளை வழிபட்டு வீட்டின்ப மெய்துகின்றதெனின், இம்மானுடப் பிறப்பின் மாண்புதான் என்னே! இம்மானுடப் பிறவியின் பெறுதற்கருமையை யுணர்த்தற்கன்றோ, சைவசித்தாந்த உண்மைகளைச் செவ்விதின் விளக்கி எம்போன்றார் பலரும் அறிந்துய்யும் வண்ணம் அருளிச் செய்தவர்களும், எம்மனோர்க்கெல்லாம் அரிதினீட்டப்பெற்ற கருவூலம் போன்றவர்களும் ஆயசந்தான குரவர் நால்வருள் ஒருவராய்த் திகழ்ந்திய சிவஞானச் செல்வ சிரேட்டர் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்,

"அண்டசஞ் சுவேதசங்க ளுற்பீசஞ் சராயுசத்தோ
டெண்டரு நாலெண்பத்து நான்குநூ றாயிரத்தா [நல்
லுண்டுபல் யோனியெல்லா மொழித்து மானிடத்துதித்
கண்டிடிற் கடலைக்கையா னீந்தினன் காரியங்காண்"

என்று தெளிய உரைத்தனர். இதனையே,

"அரிதரிது மானிட ராதலரிது"

என்றும்,

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினு மரிதரிது காண்"

என்றும் முறையே ஞானமூதாட்டியாரும், தாயுமானத் தவசிரேட்டரும் வலியுறுத்திப் போந்தனர்.

இவ்விதம் பெறுதற்கரிய மானுடப்பிறவியையடைந்த நாம் இம் மானுடயாக்கையால் பெறும் பயன்யாது? என ஆராய்வதே நம் கட்டுரையின் நோக்கமாகும். மானுடர்களாகிய நாம் இப்பிறவி யெடுத்ததின் நோக்கமென்ன? இறைவன் நம்மை இம்மானுடப் பிறவியெடுக்கும்படி செய்தது எற்றுக்கு? நாம் இம்மானுட யாக்கை தாங்குவதற்குமுன் என்னென்ன பிறவிகளில் பிறந்து இறந்து உழன்றோம்? இப்பிறவிகளில் புகுவதற்குமுன் நம் உயிர்கள் எந்நிலையில் எவ்விடத்தில் இருந்தன? என இன்னோன்னவற்றை முறையாக ஆராய்வோமாயின் இம்மானுடப் பிறப்பின் பெறுதற்கருமையும் இன்றியமையாமையும், அதனை யடைந்தால் தூநெறியின் ஒழுகிப் பயன்படுத்திக்கொள்ளும் அவசியமும், அதனாலாய பயனும் இனிது விளங்காநிற்கும். நாம் இக்கட்டுரையைச் சைவசித்தாந்தக் கருத்துக்கொண்டே ஆராய்கின்றமையின், மற்றையோர் கொள்கைகளுக்கு ஈண்டுச் சிறிதும் இடம்பாடில்லை யென்றோர்க.

முதலில், உயிர்களாகிய நாம் பிறப்புக்களுள்புகுவதற்குமுன் எங்கிருந்தோம், எந்நிலையிலிருந்தோம் என்பதைச் சிறிது ஆராய்வோம். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமும் உயிர்களாகிய நம்மிடத்தில் இயற்கையாக அமைந்துள்ளன. உயிர்களின் கருமமலம் பரிபாகமாதற் பொருட்டு முதல்வன் மாசங்காரத்தை இயற்றுங்காலத்து மாயையின் காரியமாகிய யாவும் ஒன்றனுள் ஒன்றாய் அவற்றிற்கு நிலைக்களமான மாயையில் ஒடுங்க, மாயை சிற்சத்தியி லொடுங்க, சிற்சத்தி இறைவனுள் ஒடுங்குகின்றது. உயிர்களெல்லாம் முதல்வனிச்சையின் வண்ணம் ஆணவ மலத்தால் விழுங்கப்படுகின்றன. ஆணவ மலம் இன்னதெனச் சொல்லொணாத் திணித்த இருளை வாய்ந்தது. மாணிக்க மணியை நஞ்சுவாய்க்குளடக்கின நாகம் போலவும், பச்சையாய் முளைத்து விறகாகுமட்டும் தீயைத் தெரியாமல் மறைத்து வைத்திருந்த காட்டம் போலவும், ஞானக்கண்ணை மறைத்து அறிவுஞ் செயலும் இறக்கும்படி ஆணவ மலம் உயிர்களைப்பிடித்துக் கொண்டிருக்கின்றது என்று இந்நிலையை ஒருவாறு விளக்கலாம்.

இனி, உயிர்கள் சகசமலமாய ஆணவ மலத்தால் கவ்வப்பட்டு அறிவு செயலின்றி முடம்போல இருப்பதைக் கண்டு கருணைத் தடங்கடலான முழுமுதற்கடவுள் இரக்கங்கொண்டு அவ்வாணவமலம்பரிபாகமாதற் பொருட்டுப் படைப்புக்காலத்து அவ்வவ் வுயிர்களின் முன்னை வினைக்கு (பிராரப்தத்துக்கு) தக்கவாறு புல்முதல் தேவர் ஈறாகச் சொல்லப்பட்ட பிறவிகளுள் புகுத்திச் சிறிது சிறிதாக அறிவு விளக்கம்உண்டாகச் செய்கிறான். இவ்வாறு உயிர்கள் புல்முதல் பல்பிறவிகளில் பிறந்திருந் திறந்து உழன்றே இறுதியில் மானுடப் பிறவியினை யடைகின்றன வென்பதை,

> " புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருக்க மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்லசு ராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
> மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

என்னும் மணிவாசகமே வலியுறுத்தா நிற்கும்.

இனி, இவ்வாறு உயிர் மானுடப் பிறவி யெடுக்குமுன் தாய் வயிற்றில் இருக்கும் காலத்து அனுபவிக்கும் இன்னல்களோ சொல்லொணாதன. உயிர் ஆணவ மலத் மறைப்புண்டிருக்கும் நிலைக்கும், தாய் வயற்றில் கருக்கொண்டிருக்கும் நிலைக்கும் சிறிதும் வேற்றுமையில்லை.

மாதாவினிடத்துண்டான செம்பாலிலே (சுரோணிதத்திலே) பிதாவிடத்துண்டாகிய வெண்பால் (சுக்கிலம்) பவளப்பையில் முத்தை வைத்தாற்போலப் படுகிற நாளில், உயிரானது பிராணவாயு வாகனமாகவும், மனது வழியாகவும் முதல்வனுடைய ஆணையாலே சென்று வெண்பால் செம்பாலின் தலையிலே பதிந்து, கன்மத்துக்கீடாக மூன்றரைக்கோடி யுரோமத்துவாரமும், எழுபத்தீராயிர நாடியும், வாயுவிற் பிரதானமான தசவாயுவும், நவத்துவாரமும், எண்சாணுடம்பும், எழு தாதுவும், ஆறுதாரமும், ஐந்து பொறியும், நாலு காரணமும், மூன்று மண்டலமும், இரண்டு வினையுமெனப் பேர்பெற்று, இவற்றை யொன்றெனப் போர்த்த புறத்தோலுமாக உருவங்கொண்டு, இந்த உருவத்தையுடைய சீவனு மன்னரசத்திற்குப் பிராரத்தமளவுந் தன்னுடைய உடலிலுந்திச் சக்கரத்தின் மேலே கிடந்து ஆறு மாதமுத லுந்தி நாளத்தாலே மாதாவிடத்திலே அன்னரசமுங்கொண்டு, அந்த அன்னரசத்தின் மிகுதியாலே சுழுமுனை நாடி யடைபட்டு இடையும் பிங்கலையுந் திறந்து, பிராணவாயு புகுந்து மேனோக்கி நாசித்துவாரங்களாலே விட்ட வெழுத்தாலே நாளொன்றிற் கிருபத்தோராயிரத் தறுநூறு சுவாச வுச்சாரணந் தோன்றி, முப்பத்திரண்டு நூறாயிரத்து நாற்பதினாயிரமுருச் சென்றவாறே யுதர கன்மந் தொலைந்து, மாதாவினிடத்துண்டான பிராணவாயுவிலே முதல்வனுடைய கருணையாலே சத்தி யதிட்டித்துக் கொண்டு, இந்தச் சத்தி பலத்துடனே வாயுவானது பிரஞ்ஞையைப் பூமியிலே பதிக்க வேண்டிப், 'பிரஞ்ஞாபத்தியம்' என்னும் பேர் பெற்று, இவனுடைய போதம் போல இவனுடைய உடலும் கீழ் நோக்கி விழும்படி முழுமுதற் கடவுள் தன்னுடைய ஆற்றலாலே தலைகீழாகத் தள்ளிப் பூமியில் வரச்செய்கிறான். இவ்விதக் கடவுளின் கருணைத்திறத்தை யுணர்த்தற்கன்றே,

> " மூலையி லிருந்தாரை முற்றத்தே விட்டவர்
> சாலப் பெரிய ரென்றுந் தீபற,
> தவத்திற் றலைவ ரென்றுந் தீபற"

என்னும் அருமைத் திருவாக்கும் எழுந்தது.

இங்ஙனம் மானிடப் பிறவி வாய்க்கப்பெற்ற உயிர்களே அறிவுமுழுதும் நிரம்பப் பெறுகின்றன. எனெனில், கண் காது நா மூக்கு மெய் என்னும் ஐம்புலனும், அப்புலன்களால் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் தன்மையும் வாய்ந்ததோடு,

> " கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார்
> தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு
> ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவா
> நெஞ்சத்திற் குருகிய கரியில்லை" என்ற வண்ணம்,

இன்னது செய்தல் நன்மையானது, இன்னது செய்தல் தீமையானது என்று பகுத்தறியும் நெஞ்சம் முதலாகிய அந்தக்கரண நான்கும் வாய்ந்திருப்பதால் முழு அறிவும் விளங்கப் பெறுவதற்கு ஏதுவா யிருக்கின்றது.

மேலும், உயிர்களுக்கு இறைவன் செஞ்ஞாயிற்றினையும், வெள்ளிய நிலவினையும், எழில் மலையினையும், மணி கொழிக்கும் அருவியினையும், செழும் பொழிலினையும் அற்புதமாக அமைத்து இவ்வுலகப் பொருள்களிலெல்லாம் அறிவு நுழைந்து இன்புற்றுப் பேதைமை கதுவப்பெற்ற அறிவு விளக்க முறும்படி செய்கின்றான்.

> "வார்கட லுலகில்
> யானை முதலா எறும்பீ றாய
> ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
> மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
> தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
> ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்
> இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
> மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்தும்
> ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
> அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
> ஆறு திங்களி னூறலர் பிழைத்தும்
> ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
> எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
> ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
> தக்க தசமதி தாயொடு தான்படுந்
> துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
> ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
> ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
> காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
> வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
> கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
> ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
> கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
> தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்
> தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
> கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
> பித்த வுலகர் பெருந் துறைப் பரப்பினுள்
> மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்துங்
> கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
> செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
> நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
> புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
> தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
> முனிவி லாததோர் பொருளது கருதலும்
> ஆறு கோடி மாயா சத்திகள்
> வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
> ஆத்த மானா ரயலவர் கூடி
> நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
> சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
> பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
> விரத மேபர மாகவேதி யருஞ்
> சரத மாகவே சாத்திரங் காட்டினர்
> சமய வாதிகள் தத்த மதங்களே
> அமைவ தாக அரற்றி மலைந்தனர்
> மிண்டிய மாயா வாத மென்னுஞ்
> சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
> துலோகா யதமெனும் ஒண்டிறற் பாம்பின்
> கலாபே தத்த கடுவிட மெய்தி
> அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவுந்
> தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
> தழலது கண்ட மெழுகது போலத்
> தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
> தாடியு மலறியும் பாடியும் பரவியுங்
> கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
> படியே யாகிநல் லிடையறா அன்பிற்
> பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
> கசிவது பெருகிக் கடலென மறுகி
> அகங்குழைந் தனுகல மாய்மெய் விதிர்த்துச்
> சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
> நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
> பூணது வாகக் கோணுத லின்றிச்
> சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
> கதியது பரமா அதிசய மாகக்
> கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
> மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
> தருபரத் தொருவ னவனியில் வந்து
> குருபர னாகி யருளிய பெருமையைச்
> சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
> பிறிவினை யறியா நிழலது போல
> முன்பின் னாகி முனியா தத்திசை
> என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
> அன்பெனு மாறு கரையது புரள
> நன்புல னொன்றி நாதவென் றரற்றி
> உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
> கரமலர் மொட்டித் திருதய மலரக்
> கண்களி கூற நுண்துளி யரும்பச்
> சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
> தாயே யாகி வளர்த்தனை போற்றி
> மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
> கைதர வல்ல கடவுள் போற்றி"

என்ற செழும் மாணிக்கங்களாம் திருவாசகத்தின் வண்ணம், உலகத்தில் தோன்றியதுமுதல் உண்டாகும் இடர்களிலெல்லாம் உயிர்கள் உழன்று அறிவுவிளக்க முழுது மெய்தி, உலகத்தோடொட்ட வொழுகித் தன்னைத் தோற்றுவித்தானும், தனக்கு வேண்டுவன உதவி மகிழுறச் செய்தானும் துன்ப விளைவின் மூலமாய் இன்பம் விளைவிப்பானும் ஆகிய ஒரு முதல்வன் உளன் என்னும் எண்ணம் உண்டாகி, அவ்விதம் தோன்றாத் துணையாய் நின்று அருள்புரியும் அவனை வணங்குதல் இன்றியமையாத கடமையா மென்பதை உணரும்படி செய்கின்றான்.

N. துரைக்கண்ணன்.

வானசாஸ்திரம்.

189034

(995-வது பக்கத் தொடர்ச்சி)

அண்ட உற்பத்தி

இதுவரையில் ஆகாய வெளியில் காணப்படும் அண்டங்களைப் பற்றிய விசாரணை செய்துவந்தோம். இவ் விசாரணையின் மூலமாய் நமக்குத் தெரியவந்திருக்கும் உண்மைகளை இவ்விடம் தொகுத்துச் சொல்லி இவைகளிலிருந்து இவ்வண்டகோடிகளின் உற்பத்தியைப் பற்றி வானசாஸ்திரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் பார்ப்போம். இதற்கிடையில் இன்னொரு விஷயத்தைப் பற்றிச் சொல்லவேண்டி யிருக்கிறது.

தற்கால சாஸ்திர ஆராய்சியின் முடிவாய் நமது கண்களுக்குத் தோற்றும் பொருள்களெல்லாம் வெவ்வேறு தன்மையும் தோற்றமும் குணங்களும் உடையவைகளா யிருப்பினும், ஒரே வகையான பரமாணுக்களின் சேர்க்கையால் ஏற்பட்டவை என்பது நமக்குத் தெரியக்கிடக்கின்றது. பொருள்கள் எவ்விதமாயிருப்பினும் அவைகள் எல்லாம் அணுக்களின் (atoms) கூட்டமே. இவ்வணுக்களை மேலே பிரித்துப் பார்த்ததில் இவைகள் எல்லாம்ஒரேதன்மையான பரமாணுக்களின் (Electorons)

கூட்டமே என்பது தெரியவந்திருக்கிறது. மேலும் இப்பரமாணுக்கள் சக்தியின் தோற்றமே தவிர மற்றொன்றில்லை. இப்பரமாணுக்கள் ஓயாது சுழன்று கொண்டிருக்கின்றனவென்றும் ஒவ்வொரு அணுவிலும்சேர்ந்திருக்கும் பரமாணுக்களின் தொகை வேறுபாட்டின் காரணமாக பொருள்களின் வேறுபாடு தோன்றுகிற தென்பதும் சந்தேகமற ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஒரு உண்மை. அது மாத்திரமன்று. ஜடப் பொருள்கள் எல்லாம் சக்தியின் தோற்றமே யென்பதும் சாஸ்திர ஆராய்ச்சியின் முடிவு.

வானசாஸ்திர ஆராய்ச்சியில் பூமியில் காணப்படும் பொருள்களின் அணுக்களே மற்ற அண்டங்களில் எல்லாம் காணப்படுகின்றன வென்பது நமக்குத் தெரியவந்திருக்கிறது. ஆகவே சகல அண்டங்களினது மூல பொருளே ஒன்று என்பதும் இது முடிவில் சக்தியின் தோற்றமே என்பதும் தெளியக்கிடக்கின்றது. அணுக்களின் ஆராய்ச்சியோடு சம்பந்தப்பட்டு அவ்வாராய்ச்சிக்கு முக்கிய உதவியாய் இருந்தது ஒளியின் ஆராய்ச்சியே. இவ்விரண்டுக்குமுள்ள தொடர்பு நமக்குத் தெரிந்ததின் காரணமாகச் சிருஷ்டியில் மறைபொருளாயிருந்த அனேக உண்மைகள் நமக்குத் தெரியவந்திருக்கின்றன. இந்தத் தொடர்பின் மூலமாகவே அண்டங்கள் என்னவென்பதும் அவைகள் எவ்விதம் விரிந்தனவென்பதும், எவ்விதம் எல்லையற்ற காலங்களாக ஒளிகான்று கொண்டிருக்கின்றன வென்பதும் ஒருவாறு வானசாஸ்திர ஆராய்ச்சிக்கு எட்டியிருக்கிறது. இவைகளை விஸ்தரிப்பதற்குமுன் இதுவரையும் நாம் சொல்லிவந்த விஷயங்களைத் தொகுத்து மனதில் அவதானம் பண்ணிக் கொள்வது நலம்.

1. பூமி ஏறக்குறைய உருண்டை வடிவம் உள்ளதும் ஒளியற்றதும் நீரைப் பார்க்கிலும்ஐந்து பங்கு அடர்த்தியுள்ளதுமான ஒரு சிறு அண்டம். இது தன்னைப் பார்க்கிலும் 300000 மடங்கு கனமுள்ள சூரியன் என்னும் ஒரு நக்ஷத்திரத்தை அதனிலிருந்து 93000000 மைலுக்கப்பால் நின்று ஒரு வருஷ காலத்தில் சுற்றி வருகிறது. சூரியன் நீரைப் பார்க்கிலும் ஏறக்குறைய $1\frac{1}{2}$ மடங்கு அடர்த்தியுள்ளது. பூமியைப் போன்ற வேறு அண்டங்களும் சூரியனைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன.

சூரியனுடைய காங்கை 6000 டிகிரி. அதாவது பூமியிலுள்ள எல்லா வஸ்துக்களையும் ஆவியாய் மாற்ற வேண்டியிருக்கும் காங்கையிலும் இருமடங்கு அதிகமான காங்கை யுள்ளது.

சூரியனில் இருக்கும் வஸ்துக்களெல்லாம் ஆவியாயிருக்கவேண்டும்.

2. சூரிய கிரகக் கூட்டம் அனேககோடி நக்ஷத்திரங்கள் சேர்ந்த நமது நக்ஷத்திரக் கூட்டத்துக்குச் சேர்ந்தது. இந்தக் கூட்டத்தில் சூரியனது அளவு, கனம், வேகம், காங்கை முதலியவைகளை மற்ற நக்ஷத்திரங்களோடு ஒத்துப் பார்க்கையில் சூரியன் மத்தியம ஸ்தானத்தில் இருக்கிறது.

3. நக்ஷத்திரங்களை ஒப்பிட்டுப் பார்த்ததில் அவைகள் பரிமாணத்தில் அதிக வித்தியாசமுடையனவா யிருந்தாலும் களத்தளவில் சிறிய நக்ஷத்திரங்களுக்கும் பெரிய நக்ஷத்திரங்களுக்கும் 100 மடங்குக்குமேல் வித்தியாசமில்லை. பரிமாணத்தில் 1000000 மடங்குக்குமேல்வித்தியாசம் காணப்படுகின்றது.

4. நக்ஷத்திரங்களில் ஒரே அளவுள்ளவைகளாய் ஒன்றையொன்று சுற்றிக்கொண்டிருக்கும் இரட்டை நக்ஷத்திரங்கள் வெகு சாதாரணம். சில இரட்டைகளில் ஒன்று ஒளி அற்றதாய் இருக்கின்றது. சூரியனைப்போல மற்ற நக்ஷத்திரங்களும் தங்களைச் சுற்றி ஓடும் கிரகங்கள் உடையனவோ என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாது. ஆனால் கிரகங்களை உடைய நக்ஷத்திரங்கள் மிகச் சிலவா யிருக்கவேண்டுமென்று எண்ணுவதற் கிடமிருக்கிறது.

5. நக்ஷத்திரங்களில் பெரும் மாறுதல் சடுதியாய் உண்டாகின்றது. இதற்குச் சாக்ஷி நக்ஷத்திரங்களி சில சடுதியில் அவை முன்வீசின ஒளியைப் பார்க்கிலும் 10000 மடங்கு ஒளியுள்ளவைகளாய்த் தோன்றி மறுபடியும் சிலகாலத்துக்குள் முந்திய நிலைக்கு வந்துவிடுகின்றன. இவ்விதமான சடுதியான பெருமாற்றம் காலகதியில் ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் உண்டாகலாம் என்று எண்ணுவதற்கு இடமுண்டு.

6. நக்ஷத்திரங்களுக் கெல்லாம் சலனம் உண்டு. இவைகள் தனித்தனியாய் வெவ்வேறு மார்க்கத்தில் வெவ்வேறு வேகத்தோடு சென்று கொண்டிருந்தாலும் நமது நக்ஷத்திரத்தொகுதி எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே மார்க்கமாயும் ஒரே வேகத்தோடும் ஓடிக்கொண்டிருக்கிறது.

7. நமது நக்ஷத்திரக் கூட்டத்துக்கப்பால் சற்றேறக்குறைய நூறு நக்ஷத்திரக் கூட்டங்கள் இருக்கின்றன. இக் கூட்டங்களில் லக்ஷக்கணக்கான நக்ஷத்திரங்களிருக்கின்றன. இவைகள் நமது நக்ஷத்திரக் கூட்டம்போன்ற வெவ்வேறு கூட்டங்கள் என்று கருதலாம்.

8. தூமதாரைகள் இருவகைப்படும். ஒன்று நமது நக்ஷத்திரக் கூட்டத்துக்குச் சேர்ந்தவை. இவைகள் மிகவும்காங்கையான நக்ஷத்திரங்களோடு சம்மந்தப்பட்டவை. இவைகளில் ஒளிகாலும் தூமதாரைகள் அவைகளோடு சம்பந்தப்பட்ட நக்ஷத்திரங்களின் ஒளியின் காரணமாக ஒளியுடையவைகளாகத் தோன்றுகின்றன.

9. மற்ற வகுப்புத் தூமதாரைகள் மிகவும் பிரமாண்டமானவையாயும் அப்பாலுக் கப்பாலாய் நின்று நக்ஷத்திரக் கூட்டங்கள் உற்பத்தியாவதற்கு முதற்காரணமாய் இருப்பனவென்று கருதப்படத்தக்கவையா யிருக்கின்றன.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

9. அகலிகைப் படலம்.

(985-ம் பக்கத் தொடர்ச்சி.)

அன்பு கொண்டார் அன்பே கண்டார்

கல்லாய்க்கிடந்த அகலிகையை மனையின் மாட்சியை அழித்து இழிந்தவளென்றும், மீண்டும் அவளையே இராமன், கௌதமன் கையிலளிக்கும்போது மாசறு கற்பின் மிக்கவளென்றும் கம்பர் அழைப்பதில் யாதும் முரணில்லை என்பது வெளிப்படை. ஸ்ரீ இராமபிரானது பாதத்துகள் படுவதன்முன் இருந்தநிலை அது; பட்டபின் அடைந்த தூய்மைஇது. பின்னர் இவள் உயர்கின்ற உயர்வை உன்னியுன்னி நாமெல்லாம் உய்யுமாறே, முன் அவள் அடைந்த இழிவை வான்மீகி முனிவர் வாய்விட்டும், கம்பர் ஒருசிறிது மறைப்பவர்போலும் கூறிக் காட்டினர். உலகினிற்கு நெடும்பழி பூண்டவளை முன்வைத்துக் கூறிவந்த கோசிகன் அவளற்றங் காக்கவேண்டுமென்று பரிவொடு முயன்றதால், 'தக்கதன்றென ஓராத் தாழ்ந்தனள்' என்றும் 'நெஞ்சினால் பிழைப்பிலாதாள்' என்றும் சொல்லலாயினனெனினும், நெஞ்சறிந்தே அவள் தன் கற்பைக் கவிழ்த்தனள் என்னுங் கருத்தே கொண்டிருந்தனன் என்பதற்கு ஐயமில்லை.

இன்னபடி குலமாதர் புகழிற்கே பெரும்பழியாய் விலைமகள் அனைய இழிதொழில் புரிந்தவள்—இராவணன் இல்லை என்றாலும்—இழுக்கே யுற்றாள். மற்று, அவ்வகைத்தாய அகலிகையின் கல்லுருவைத் தயரதராமனது திருவடி தீண்டியவுடன், அவள்

"உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டுருவம்
கொண்டு மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனள்"

என்றுகூறிய கொள்கையைப்பற்றியே கம்பர்பின் மாசறு கற்பின் மிக்க அணங்கென்றுங் கூறலாயினர். எனினும், இவ்வடிகளில் வந்துள சொற்கள் எவ்வாறு அன்வயப்பட்டால் கம்பரது கருத்திற்கு இணங்கியவாகுமென்று ஐயமற நிற்கவில்லை. ஒருவன், தன்னுடைய முயற்சியாலோ வேறெவ்வகையினாலோ தன்னைப் பற்றியுள அஞ்ஞான மயக்கத்தைக் கழித்து மெய்ஞ்ஞானம் பெற்றுக் கருமசரீரம் மாறித் திவ்ய சரீரமெய்தி எம்பெருமானுடைய திருவடியைச் சேர்வதொக்க அகலிகை பண்டை வண்ணமாய் நின்றாள் என்னுமிக்கருத்துப் பொருந்துதல் அருமை. ஏனெனில், எம்பெருமானது பாதங்களைக் கூடுவதன் முன்னேயே, பேதைமை மயக்கறுதல் உருவம் வேறுபடுதல் மெய்யுணர்வு பெறுதல் முதலியவெல்லாம் நேர்ந்துவிட்டதாக ஏற்படுகின்றது. ஆதலால் பல்வேறு சமயங்கள் வகுத்த மார்க்கங்களால் மெய்யறிவு பெற்றவர்களே அப்பரந்தாமனது பாதங்களைக் கூடுவரென்னும் துணிபிற்கு இப்பொருள் இடந்தருவதாகும். மற்று, அஞ்ஞானத்தை நீக்கிக் கொண்டவர்கள்தாம் அவனடியைச் சென்றடைவாரோ, அல்லது எவரேனும் அவனடியை அடைந்தால்தான் அஞ்ஞானம் நீங்குதற் கொத்தவ ராவரோ, என்னும் மாறுபடு கொள்கைகளை இவ்விடத்தில் வாதிக்க வேண்டாவெனினும், முன்னது இங்குப் பொருளாயின் அவ்வுவமை அகலிகை பண்டைவண்ணமாய் நிற்கின்ற நிகழ்ச்சியைத் தழுவிப் பொருந்தாமை தெளிவாகத் தோன்றுகின்றது. இதுவுமன்றிக் கம்பர் கடவுள் வணக்கம்பாடிய செய்யுள்களினீற்றறில், "மெய்ந் நெறி நன்மையன் பாத மல்லது பற்றிலர் பற்றிலார்" எனக் கூறியதாலும், அலகு இல்லன உள்ளன வேத மென்பன யாவையும் ஆதிஅந்தம் அரியென ஓதினருங்கூட, இப்பரம புருஷனது பாதங்களைப் பற்றியபின்னரே, அஞ்ஞானமும் அதனால் விளையும் வெருளி மயக்கங்களுக்குக் காரணமாய் முதல்நிற்கின்ற பற்றும் அற்றவ ராவாரெனும் பெற்றியரெனக் கொள்ளலாம். மெய்யறிவானது ஒருவனக்கு வேதநூல் பயிற்சி முதலியவைகளால் தோன்றியவுடனே அவன் அம்மெய்யுணர்வின் செயலாலேயே பற்றெல்லாம் அற்றவனாக மாட்டான். இம்மெய்யறிவு செய்யக்கூடியதெல்லாம் ஒருவனைக் கொண்டுபோய் எம்பெருமானது அடிகளில் சேர்த்துவைப்பதுதான். அவ்வாறு சேர்ந்தவொரு ஆன்மா அச்சேர்க்கையால் பற்றுஅற்று, இடையிலே கருமத்தால் உற்ற மாசுநீங்கித் தனக்குரிய தனிப்பெருந்தன்மையை மீண்டும் அடைகின்றது. கடவுள் வணக்கச் செய்யுளிலிருந்து இதுவே கம்பரின் கொள்கைபோல் தோன்றலாகும். அதுவுமின்றி, ஞானமுற்றவர் தன் கழல் வந்து அடைவதல்லால் தன்கழலை வந்து அடையுமாறு தூண்டுதற் கொத்த அஞ்ஞானத்தையும் அழிக்கின்ற எம்பெருமானது கருணையின் அருமையைப் பின் சூர்ப்பணகைப் படலத்தில்

"எண்ணருளி யேழைமை துடைத்து எழுமெய்ஞ்
கண்ணருள் செய் கண்ணன்" [ஞானக்

என்று கம்பர் பாராட்டுகின்றார். ஆதலால் கம்பர் கருத்தின்படி கருணாகரமூர்த்தியால் அளிக்கப்பெற்றோ தாமாகஎய்தியோ ஞானமடைந்தவர்களும் அவன் கழல் நிழல் பட்டபின்னரே பண்டைவண்ணத்து ஆன்மரூபிகளாதல் கூடும். அதலால், "அஞ்ஞான மயக்கத்தைக் கழித்து மெய்ஞ்ஞானம் பெற்றுக் கரும சரீரம் மாறித் திவ்ய சரீரமெய்தி எம்பெருமானுடைய திருவடியைச் சேர்வதொக்க அகலிகை பண்டை வண்ணமாய் நின்றாள்" என்று இப்பாசுரத்தைப் பொருள் படுத்தல் கம்பரது கருத்தினின்று வேறுபடுவ தாகும். அல்லாமலும், இங்குக் காகுத்தன் கழல்துகள் கதுவ, அதன் காரணமாகவே பண்டைவண்ணமாய் நின்றாள். பண்டைவண்ணமாகிப் பிறகுபோய் அவன் அடிகளிற் பணிந்தாளல்லள். எனின் இப்பொருளில் எய்துகின்ற உவமை, நிகழ்கின்ற நிகழ்ச்சி முறையோடும் சிறிது பிணங்குகின்றது.

மற்று, கவியின் கருத்திற்கும் உவமையின் பொருத்தத்திற்கும் ஏற்புடையதாகா இப்பொருளை விடுத்து அப்பாசுரத்திற்கு வேறோர் பொருள்கொள்ள இயலுமாயின் அதனைக் கொள்வதே தக்கதாம். 'மெய்யுணர்பவன்' என்பதை ஒன்றாகச் சேர்த்து எம்பெருமானைக் குறிப்பதாக வைத்துக் கொள்ளலாம். கொண்டு, அற என்னும் வினையெச்சத்தையும் காரியப் பொருளதாக ஏற்போமாயின், 'கண்ட கன்மிசைக் காகுத்தன் கழல்துகள் கதுவ—உண்டபேதைமை மயக்கற மெய்யுணர்பவன் கழல்கூடியது ஒப்ப, வேறுபட்டுஉருவங்கொண்டு பண்டைவண்ணமாய் நின்றாள்', என இச்செய்யுள் அன்வயப்பட்டு நிற்கும். வந்தடைந்த அஞ்ஞானத்தால்

சூழ்ந்துகொண்ட காமம் வெகுளி மயக்கம் ஆதியன அற்றுப்போகும்பொருட்டு அந்த ஞான ஸ்வரூபியின் பாதங்களைக்கூடிய ஒருவனைப்போல் அகலிகையும் காகுத்தனுடையபாதரேணு பட்டவுடன் கல்லுருவந் தீர்ந்து பெண்ணாகி வேறுருவங் கொண்டு முன்னைத் தன்மையில் நின்றாள் என்றுரைத்தால் உவமையும்,கவியின் கொள்கையும் பிறழாமல் காக்கப்படுகின்றன. அதுவுமன்றித் தானாக வந்து தன் திவ்விய தாளினை அளித்துத் தடுத்தாட் கொள்ளும் அவன் கருணைத் திறத்தையும் இதனிற் காண்கின்றோம். காகமானது ஒரு கோடி கூடினும் ஒரு கல்லின் முன் எதிர் நிற்காதது போலவே ஈசுவரனது கருணைக்கு இலக்காயபின் கன்மங்களெல்லாம் தாமே தொடர்பற்றுப் பறந்து விடுகின்றது. அகலிகை இழிந்தழிந்தாள். அன்னவளை அருள் செய்ய எம் பெருமான் தேடி வந்து உருவத்திலல்லாமல் அவளது கற்பிலேயும் பண்டை வண்ணத்தளாக்கினன். கௌதமன் அவளுக்கு அருளிய விமோசனம் எல்லாம், "தயரத ராமனென்பான் கழற்றுகள் கதுவ இந்தக் கல்லுருத் தவிர்தி" என்றதுதான். இராமபிரான் வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசும் பெருந்தகை வள்ளலாதலால் உருவம் தீர்த்ததல்லால் அவள் தோஷத்தையுந் தீர்த்துப் பண்டை நாட்போல் மாசறு கற்பின் மிக்கவளாக்கி விட்டான். இது பற்றியே, 'பண்டை வண்ணமாய் நின்றாள்' என்றும், 'முன்னை வண்ணத்தளாகி நின்றாள்' என்றும், அவளடைந்த மாற்றத்தையும், 'குணங்களால் உயர்ந்த வள்ளல்' என்று இராமனையும் கம்பர் நன்கு தெரிவிக்கின்றார்.

இன்னவாறு இருக்கு மிடந் தேடிவந்து இரக்ஷிக்கப் புகுவது கடவுட்கருணையின் தன்மை. ஆயின் அகலிகைக் களித்ததாளைத் தாடகைக் குதவாமல் சுடுசரத்தால் அவள்பால் தன்கைவண்ணங் காட்டியதேனோ என்னுமோர் ஐயம் எழுவது இயற்கையே. இதற்கு விடை இன்னதென்று துணிவது எளியதன்று. அகலிகையைப் போல் தாடகையும் தன்னுடைய தீமைக்கு ஆற்றுளாகித் கழிவிரக்கம் (Repentance) கொண்டிருப்பாளேல் அவளையும் அளித்திருப்பாரோ யாதோ ! முதற் போர் முடிந்தநாள் இராகவன்,

சிறையில் வைத்தவ டன்னைவிட் டுலகினிற் றேவர்
முறையில் வைத்துநின் தம்பியை யிராக்கதர் முதற்பே
ரிறையில் வைத்தவற் கேவல்செய் திருத்தியே லின்னுந்
தறையில் வைக்கில னின்றலை வாளியிற் றடிந்து

[சிறையில் வைத்திருக்கும் சீதையைவிட்டு, இவ்வுலகில் தேவர்கள் இருக்கவேண்டிய முறையில் அவர்களை வைத்து, உன்தம்பி விபீடணனை அரக்கர்களுக்கு அரசனாக்கி நீயும் அவன் பணிகேட்டுக் கிடப்பாயானால், இன்னமும் கூட உன்தலையை என்பாணத்தால் அறுத்துத் தரையில் வைக்காமலிருப்பேன்]

என்று இராவணனுக்குச் சாற்றியதும், எத்துணைத் தீயரேனும் கழிவிரக்கங் கொண்டக்கால் அவனுடைய கருணைக்குப் பாத்திரமாவாரென்பதை வலியுறுத்தி நிற்கலாம். பெருந்தீமை முதிர்ந்தோரைப் பொறுக்குங் காலையிற்றான் கடவுளின் கருணையின் முதிர்ச்சியும் தெரியலாகி, அதனை நினைக்கநினைக்க நமதுள்ளம் அன்பினால் அவன்பால் நாடுவதாகின்றது. இக்கருத்தினைக் கிறிஸ்தவர் வேதத்திலும் இனிதின் காணலாம். ஏசுகிறிஸ்து நாதர் ஒரு பெருமகன் வீட்டில் அமுதருந்தி இருந்தபோது, மிக்க பாவம் செய்த மேரி மாடெலின் என்பாளொருத்தி அந்நகரத்துளாள், அங்குச் சென்று கிறிஸ்து நாதரின் பாதங்களைத் தன் கண்ணீரால் கழுவிக் கூந்தலால் துடைத்துப் பலபட ஆராதனை புரிந்தனள். இதனைக்கண்ட அங்கிருந்தோர், "இவன் தீர்க்க தரிசியாயிருந்தால் தன்னைத் தீண்டுகின்ற இவள் யாவள், எத்தகையவள் என்பதை அறிந்துகொள்ளானோ: பெரும் பாவியாயிற்றே அவள்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டார். அவர் கருத்தை உணர்ந்த ஏசுகிறிஸ்து, "ஐயா, ஒன்று உரைக்கிறேன். கேள். ஒருவனுக்கு இருவர் கடன்காரர்கள் இருந்தனர். ஒருவன் ஐந்நூறு பொன் கொடுக்க வேண்டியிருந்தது; மற்றவன் ஐம்பது பொன் கொடுக்க வேண்டியிருந்தது. அவர்கடனைக்கொடுக்க வகையற்றுப் போகவே, இருவர் கடனையும் அவன் மன்னித்துவிட்டான். ஆயின்,இவ்விருவரில் அதிக அன்பு அவன்பால் யார்காட்டுவார், கூறுதி" என்றனர். அதற்கவர், "யாரை அவன் அதிகமாக மன்னித்தானோ அவனே யாதல் வேண்டும்" எனப் பதிலுரைத்தார். அதற்கு ஏசுகிறிஸ்து நாதர், "நேரே மதித்தனை.........கணக்கிறந்த இவள் பாவங்களும் மன்னிக்கப்பட்டன. ஏனெனில் அவள் என்பால் அதிக அன்பு கொண்டுளாள். சிறிதே மன்னிக்கப்படுவதற்கிருப்போர்தம் அன்பும் சிறியதேயாகும்" என்று தன் உதாரணத்தைப் பூர்த்திசெய்து எடுத்துக்காட்டினர். ஆதலின் செய்த பாவங்கள் பலவாயினும், பின் திருந்திய மனதினால் கழிவிரக்கம்பூண்டு, அன்போடு கடவுளின் கழல்களை அடைந்து ஆராதித்தால் அப்பாவங்கள் தீர்ந்து யாவரும் அளிக்கப்பெறுவர் என்பது இவ்விருபெரும் மதங்களுக்கும் இணங்கியவோர் துணிபாகும்.

கோசிகன் கண்ட கைவண்ணமும் கால்வண்ணமும் இவை. ஆனால், கோசிகன் தன்னுடைய அறிவினால் இவைகளினுடைய தன்மைகளை ஆராய்ந்து நோக்கினவன். ஆதலால் அவனுக்குத் துஷ்டநிகரகம் சிஷ்டபரிபாலனம் என்னும் இருபுறங்களும் அவனுக்கு இராகவன்பால் தோன்றின. அஃதின்றி முற்றிலும் அன்பினது ஆர்வத்தாலேயே அவன்பால் பிணிக்கப் பெற்றுள உள்ளத்தவர்கள், அழிப்பதற்குக் கையென்றும்அளிப்பதற்குக் காலென்றும் எம்பெருமானது உறுப்புக்களைப் பிரித்து நோக்கார். அன்பினால் தேர்வோர், உலாவந்த இராகவனைக்கண்ட மிதிலாநகரமாதரைப்போல், "கண்ணினால் காதல் என்னும் பொருளையே காண்கின்றோம்" என்று அன்பே திரண்டதென அவனுருவத்தை உவப்பர். அவ்வுலாவியற் படலத்தில்,

அரத்தமுண் டனைய மேனி
அகலிகைக் களித்த தாளும்
விரைக்கருங் குழலிக் காக
வில்லிற நிமிர்ந்து வீங்கும்
வரைத்தடந் தோளுங் காண
மறுகினின் வீழு மாதர்
இரைத்துவந் தமிழ்தின் மொய்க்கும்
ஈயின மென்ன லானார்

[செவ்வரக்குப் பூசியதொத்த மேனியையுடைய அகலிகைக்கு முன்னை வண்ணத்தை அளித்த தாள்களையும், வாசனையமைந்த கூந்தலையுடைய சீதைக்காகச் சிவன் வில் உடையும்படி உயர்ந்து பூரித்த மலைபோன்ற பெரிய தோள்களையுங் காணத் தெருக்களில்வந்து அடர்கின்ற (அம்மிதிலை) மாதர்கள், ஒலித்து வந்து அமிர்தத்தில் மொய்க்கின்ற வண்டுக்கூட்டங்கள் என்னும்படி ஆயினர்]

என்று உரைக்கும்போது தாடகையைத் தடிந்த தோளல்லாது சீதைக்காக வில்லிற வீங்கிய தோள்களையே, மாதர் காணவந்ததாகக் கம்பர் தேர்ந்துகூறுகின்றார். 'கைவண்ணம் அங்குக் கண்டேன் கல்வண்ணம் இங்குக்கண்டேன்' என்று விச்வாமித்திரன் புகழும்போது இக்கார்முகம் இறுத்தல் நிகழ்ந்ததில்லை என்பது உண்மையே; ஆதலால் அவன் இதனைக் கூறியிருத்தல் இயலாது. ஆனால் மிதிலையில் இராமன் உலாப் போந்தபோது மைவண்ணத்தாக்கிபோரும் முடிந்திருந்தது, பிஞ்ஞகன் பிடித்த பெருவில்லும் இற்றிருந்தது. எனினும் அகலிகையை அளித்துத் தன்வண்ணம் காட்டிய கால்களுக்கு இணையாகக் காணவேண்டியது வில்லிறுத்த தோளேயன்றித் தாடகையை வென்ற தோளன்று. தன்மேல் சீதாபிராட்டி கொண்ட அன்பைப் பெறுவதற்கு விலக்கரிய மலைபோல் தடையாய்க் கிடந்தது அம்மாயவில். அவ்விடையூற்றை இறுத்துத் தன்பால் செலுத்திய அவ் அன்பை அன்போடு ஏற்றுக் கொள்ள அவன் தோள்கள் நிமிர்ந்தன. அகலிகைக்கு அருளைச் சென்றளிக்கும் தாள்கள். தனக்கும் தனது அன்பர்க்கும் இடையே கிடக்கும் மிகப் பெரிய தடைகளையும் எளிதில் தகர்த்து அவரது அன்பை ஏற்று இன்புறுதற்கு உதவும் தோள்கள். கண்ணினால் காதலென்னும் பொருளையே இராமனெனக் காணலாகும் அன்பிற்சிறந்த மாதர், அவ்வன்பை ஏற்பதற்கும் அளிப்பதற்கும் ஏற்றவையென அவன் கைவண்ணத்தையும் கால்வண்ணத்தையும் கண்டதிறம் இது!

சீதாபிராட்டியைப்போல் சமநிலையில் எம்பிரான் பால் அன்பினைச் செலுத்தி எத்தடை இருப்பினும் விலக்கி அவன் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுதற்கொத்த தூய்மையை எய்தி நில்லா நம்மனோர் அவன் தாள்களது அருளிற்கே அவாவுதல் அமையும். பரம பக்த சிரேஷ்டராகிய அழகிய மணவாளதாசரும்,

புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்பொன்னி
பொன்கொழிக்கும்
அலையா ரரங்கத்து வாழெம்பி ரானம
தன்னையொடும்
தொலையாத கானங் கடந்தவந் நாடடந்
தோறும்புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்தில மேநெஞ் சமேகழல்
தீண்டுகைக்கே

[ஏ, நெஞ்சே, பொன்னை இருபுறத்திலும் கொழிக்கும் காவிரிநதியின் அலைகள் பொருந்திய ஸ்ரீ அரங்கத்தில் வாழும் எம்பிரான் நமது அன்னையாகிய சீதாபிராட்டியோடு சென்று தொலையாத காட்டைக் கடந்த அப்பொழுது அனது பாதம் தீண்டும்படி வழியிலே புல்லாகவேனும் கல்லாகவேனும் கிடப்பதற்கொத்த பாக்கியம் செய்திராத நாம், இம்மானிடப் பிறவி எடுத்து என்னபயனைக் கண்டோம்]

எனத்தன் னெஞ்சொடு புலந்து கொள்வாரென்றால், ஏனையோரைப்பற்றி இயம்புவானேன்.

T. N. சேஷாசலம்.

தமிழ்ப் பாடம் 51.

நள வெண்பா

(991-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

கந்தனையுங் கன்னியையுங் கண்டா யினுஞ்சிறிது
தன்துயரந் தீர்ந்து தனியாறத்—தந்தை
பதியிலே போக்கினான் சேதிபர்கோன் பண்டை
விதியிலே போந்தாளை மீண்டு. 146.

கருத்து:—பிறகு, பிள்ளையையும் பெண்ணையும் கண்டாகிலும் தமயந்தி தன் தனிமை நீங்கிச் சிறிது துயரம் தீரும்பொருட்டுச் சேதிபர் அரசன் அவளை அவள் தந்தையின் நகராகிய குண்டின புரத்திற்கு அனுப்பினான்.

குறிப்பு:—ஒரு காரியத்தைச் செய்வதைப்பற்றிச் சொல்கின்ற சொல் வினைச்சொல் என்று சொல்லி இருக்கின்றோம். அது வினை முற்றாகவும் எச்சமாகவும் இருக்கக் கூடிய தன்மைகளையும்; எச்சம், என்பது வினையெச்சம் பெயரெச்சம் என இருவகைப் படுவதையும் பார்த்தோம் (190-வது பக்கம்).

இனிக் காரியம் தன்னளவிலே முடிவடைவதையும் முடிவு அடையாமல் வேறொன்றால் பூர்த்தியாகவேண்டி இருப்பதையும் மனதிற் கொண்டு வினைச்சொல்லை, முற்று என்றும் எச்சமென்றும் வகுத்தோம். இதுவன்றி வினைச்சொற்களை வேறு காரணங்களைக் கொண்டும் பின்னும் பலவிதமாகப் பிரிக்கலாம்:—

I உடன்பாடு—எதிர்மறை

வினைச்சொல் ஒரு காரியத்தைப்பற்றிச் சொல்கின்ற சொல். அந்தக்காரியம் செய்வதைப்பற்றிச் சொல்லலாம் அல்லது செய்யாததைப் பற்றிச் சொல்லலாம். செய்வதைப்பற்றிச் சொல்கின்ற வினை, உடன்பாட்டு வினை அல்லது விதிவினை எனப்படும். செய்யாததைப்பற்றிச் சொல்கின்ற வினை, எதிர்மறைவினை அல்லது மறை வினை எனப்படும். இவ்வுடன்பாட்டு எதிர்மறை வினைகள், வினைமுற்றாக இருக்கலாம், அல்லது வினையெச்சமாக இருக்கலாம், அல்லது பெயரெச்சமாக இருக்கலாம்:—

நின் சொற்படி கேட்பேன்	உடன்பாடு	வினைமுற்று.
அன்போடு அளித்தால் உண்பேன்		
உன் சொல் இனிக் கேளேன்	எதிர்மறை	
ஊன் உணவு இனி உண்ணேன்		
நல்லிசை கேட்டு மகிழ்ந்தான்	உடன்பாடு	வினை எச்சம்.
நல்லிசை கேளா மகிழ்ந்தான்		
அறுசுவை உண்டு மகிழ்ந்தான்		
அறுசுவை உண்ணு மகிழ்ந்தான்		
நல்லோர்சொல் கேளாது அழிந்தான்	எதிர்மறை	
நல்லோர் சொல் கேளா அழிந்தான்		
நான்கு நாள் உண்ணாது வாடினான்		
நான்கு நாள் உண்ணு வாடினான்		
தந்தைசொல் கேட்ட பிள்ளை	உடன்பாடு	பெயரெச்சம்
பால் உண்ட பிள்ளை		
தந்தை சொல் கேட்காத பிள்ளை	எதிர்மறை	
தந்தை சொல் கேளாப் பிள்ளை		
ஊன் உண்ணுத மாந்தர்		
ஊன் உண்ணு மாந்தர்		

மேற்கண்ட உதாரணங்களில் வாக்கியத்தின் அமைப்பிலேயே அச்சொற்கள் உடன்பாடாயிருப்பதும் எதிர்மறையாயிருப்பதும் தெரியவரும். இவைகளை ஆங்கிலத்தில் affirmativeஎன்றும் negative என்றும் சொல்வர். இவ்வுதாரணங்களில் 'கேளாமகிழ்ந்தான்,' உண்ணு மகிழ்ந்தான், என்றபோது கேளா, உண்ணு என்பன உடன்பாட்டு வினையெச்சங்களென்றும், பிறகு அவைகளே கேளா அழிந்தான், உண்ணுவாடினான், என்றபோது எதிர்மறை வினையெச்சங்களென்றும், மீண்டும் அவைகளேகேளாப்பிள்ளை உண்ணுமாந்தர் என்னுங்கால் எதிர்மறைப் பெயரெச்சங்களென்றும் காட்டியுள்ளோம். இவ்வாறு ஒரு உருவத்திலுள்ளவை பலவித சொற்களாக வரக்கூடுமென்பதை முன் 51-வது பக்கத்தில் விரிவாகக் கூறியுள்ளோம். அதனை இப்பொழுது ஒரு

முறை எடுத்துப் படித்துக் கொள்ளவும். அவ்விடத்தில், உண்ணா, ஊடா கேளா காணா என்பனபோல் செய்யா என்ற வாய்பாட்டில் இருக்கின்ற சொற்கள், வினைமுற்றாகப் 'புலிகள் புல் உண்ணா' என்பதுபோல் அமையும் போது எதிர்மறையாக மாத்திரமும், வினையெச்சத்தில் சந்தர்ப்பத்திற் கேற்றபடி உடன்பாடாகவேனும் எதிர்மறையாகவேனும், பெயரெச்சத்தில் ஈறுகெட்ட எதிர்மறை மாத்திரமாகவும், இருக்கக்கூடும் என்று சொன்னோம். இது செய்யா என்னும் வாய்பாட்டிற்கு மாத்திரம் உரிய இலக்கணம். ஆனால் வேறு உருவத்தில் இருக்கிற சில வினைமுற்றுக்களும் உடன்பாடாக ஒரு போதும் எதிர்மறையாக மறுபோதும் வரக்கூடும். கேளாய் வாராய் உண்ணாய், காணாய், பாராய், என்பன போல் ஆய் என்று முடிகின்ற வினைமுற்றுக்கள் இருக்கின்றன. இவைகளுக்குக் கேள் வா உண் காண் பார் என்ற உடன்பாட்டுப் பொருளுமுண்டு. கேட்கமாட்டாய் வரமாட்டாய் உண்ணமாட்டாய் காணமாட்டாய் பார்க்கமாட்டாய் என்ற எதிர்மறைப் பொருளுமுண்டு.

காணாய் அன்ப இவ்வனத்தி னழகை. இனியது இவ்வுணவு, உண்ணாய். கூறுவேன் ஒருகதை கேளாய் மகனே.	உடன்பாட்டு வினை முற்று
கண்ணிலாத நீ இதனைக் காணாய் நோயுற்ற நீ இதனை உண்ணாய் பயனிலாச் சொற்கள் கேளாய்	எதிர் மறை வினைமுற்று.

சாவான், வேவான் என்பன போன்ற சில சொற்கள் செத்துப்போவான் வெந்துபோவான் என்ற உடன்பாட்டுப் பொருளிலும், சாகமாட்டான் வேகமாட்டான் என்ற எதிர்மறைப் பொருளிலும் வழங்குவதுண்டு.

முன்னே, செய்யா என்ற வாய்பாடு, வினையெச்சமாயிருந்தால் உடன்பாட்டையேனும்எதிர்மறையையேனும் காட்டுமென்றும், ஆனால் பெயரெச்சமாயிருந்தால் எதிர்மறையை மாத்திரந்தான் காட்டுமென்றும் கூறினோம். இந்த இலக்கணம் செய்யா என்பது போன்ற உருவத்தில் வருகின்ற சொற்களுக்கு மாத்திரந்தான் பொருந்தும். இனிச் செய்யிய என்ற வாய்பாடு வினையெச்சங்களும் இருக்கின்றன. முன் சுயம்வரகாண்டம் 90-வது செய்யுளில் (350-வது பக்கம்), பருகுவான் பெய்வான் என்று வந்துள்ள சொற்கள் வான் என்ற முடிவுபெற்ற வினைச்சங்கள் என்று சொன்னோம். அவ்விதமே, காணிய தேடிய நாடிய கூடிய, என்பனபோல் இய என்னும் முடிவு பெற்றும் வினை எச்சங்கள் வரலாம். (இவைகளைச் சாதாரணமாகக் காண தேட நாட கூட என்று வழங்குவோம்). அவைகள்தாம் செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். பொருள் தேடிய வந்தான்; காதலனைக் கூடிய வந்தான்; என வரும்போது இவை உடன்பாட்டு வினையெச்சங்கள். ஆனால், தேடிய பொருள், கூடிய காதலன், என்னுங்கால் அவை உடன்பாட்டுப் பெயரெச்சங்கள். ஆதலால் ஒரேசொல் ஒரே உருவத்தில் சந்தர்ப்பத்திற் கேற்றபடி உடன்பாட்டுப் பொருளிலேயே வினையெச்சமாகவும் வரக்கூடும், பெயரெச்சமாகவும் வரக் கூடும்.

II தன்வினை—பிறவினை

இவ்விதமாக வினைச்சொற்கள் உடன்பாடு எதிர்மறை என்ற வகையில் பிரிவது கண்டோம். இனி அவைகளைத் தன்வினை பிறவினை என்று இன்னொரு வகையிலும் பிரிக்கலாம். வினைச்சொல் குறிக்கின்ற காரியத்தை எழுவாயே செய்யுமானால் அது தன்வினையாகும். பையன் தெருவில் ஓடினான்; மாணவர் நாடகம் ஆடினார், மைந்தன் வீட்டிற்கு வந்தான், என்ற உதாரணங்களில் ஓடினான் ஆடினார் வந்தான் என்ற வினைச்சொற்களிலடங்கிய ஓடுதல் ஆடுதல் வருதல் ஆகியகாரியங்களைச்செய்தவர் அவைகளுக்கு எழுவாயாக இருக்கின்ற பையன், மாணவர் மைந்தன் முதலியவர்களேயாவர். இனிப் பையன் பறவைகளை ஓட்டினான்; குறவன் குரங்கை ஆட்டினான்; தந்தை தன் மைந்தனை வீட்டிற்கு வருவித்தான்' " என்போமாயின், ஓடுதல் ஆடுதல் வருதல் ஆகிய காரியங்களைப் பையனும் குறவனும் தந்தையும் செய்யவில்லை. அவர் பறவை குரங்கு மைந்தன் போன்ற பிறரையே அக்காரியம் செய்யும்படி செய்தனர். ஆகையால் அவ்வாறு தானே செய்யாமல்,செய்விக்கின்றதைக் குறிக்கும் வினைச்சொற்களுக்குப் பிறவினை என்று பெயர்.

இந்தச் செய்யுளிலே, போக்கினான் என்று வந்துள்ள வினைச்சொல், போவதாகிய காரியத்தைச் சேதிபர்கோன் செய்யாது தமயந்தி செய்யும்படி செய்தான் என்று காட்டுவதால் அது பிறவினை—இதற்குத் தன்வினை போனான் என்பது.

வா போ நட உண் பெருகு சொல், இவையெல்லாம் தன்வினைக்கு உதாரணம்; இவைகளுக்குப் பிறவினைகள் முறையே, வருவி போக்கு நடத்து உண்பி பெருக்கு சொல்வி என்பன வாகும்.

முன் உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் பொதுவாய்ச் சில வினைச்சொற்கள் வருவதும் கூடும் என்று காட்டினோம். அவ்விதமே தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாக வரக்கூடிய வினைச்சொற்களும் உண்டு. வானம் வெளுத்தது, என்னும்போது வெண்மை யடைதலாகிய காரியத்தைச் செய்தது எழுவாயா யிருக்கும் வானமே. ஆகையால் வெளுத்தது என்பது இங்குத் தன்வினை. 'வண்ணான் துணியை வெளுத்தான்,' என்போமாகில் வெண்மையை அடைவது வண்ணான் அல்லன். அவன் துணி வெளுப்படையும்படி செய்தான். அதாவது, வெளுப்படைவதாகிய காரியத்தைச்செய்தது எழுவாயாகிய வண்ணானல்லாமல் பிறிதொன்று. ஆகையால் வெளுத்தான் என்பது இங்கே வெளுக்கும்படி செய்தான் என்ற பொருளில் பிறவினையாகின்றது.

தன் வினையைப் போலவே பிறவினைகளும் முற்றாகவேனும் பெயரெச்சமாகவேனும், வினையெச்சமாக வேனும் வரலாம்.

	தன்வினை	பிறவினை
முற்று:-	சிறுவன் நடந்தான்.	சிறுவன் குதிரையை நடத்தினான்
பெயரெச்சம்:-	ஓடிய குதிரை இது.	அவன் ஓட்டிய குதிரை இது
வினையெச்சம்:-	அவன் ஓடிவந்தான்.	குதிரையை ஓட்டி வந்தான்.

III. செய்வினை—செயப்பாட்டுவினை (Active and Passive)

ஒருகாரியம் தான் செய்வதானால்அதனைக் குறிக்கின்ற வினை தன்வினை யென்றும், பிறரைச் செய்விப்பதனால் பிறவினை யென்றுங் கூறினோம். இன்னொரு விதத்திலும் காரியம் நிகழலாம். ஒருகாரியத்தை எழுவாயாயிருப்பது தானே செய்யலாம், அல்லது அக்காரியம் அதன்பால் செய்யப்படலாம். அவன் இப்புலியைக் கொன்றான், என்னும்போது எழுவாயாகிய அவன் கொல்வதாகிய காரியத்தைச்செய்தான், ஆகையால் கொன்றான், தன் காரியத்தைச் செய்ததைக் காட்டுவதால் தன்வினை. இனி, இப்புலி அவனால் கொல்லப்பட்டது, என்றால் கொல்வதாகிய காரியத்தைச் செய்தது எழுவாயாகிய புலியன்று. கொல்வதாகிய காரியம் புலியின்பால் செய்யப்பட்டது. ஆகையால் அது செயப்

பாட்டுவினை. கட்டப்பட்டது, எழுதப்பட்டது அடிக்கப்பட்டான், என்பனபோல் வருவன செயப்பாட்டுவினைகள்.

செய்வினையைப்போல் செயப்பாட்டுவினைகளும், முற்றாகவேனும் பெயரெச்சமாகவேனும் வினையெச்சமாகவேனும் இருக்கலாம்:—

முற்று: —அவன் பையனை அடித்தான்.	பையன் அவனால் அடிக்கப்பட்டான்.
பெயரெச்சம்:—நான் அடித்த பையன் இவன்.	என்னால் அடிக்கப்பட்ட பையன் இவன்.
வினையெச்சம்:—நான் பாம்பை அடித்துக்கொன்றேன்.	பாம்பு என்னால் அடிக்கப்பட்டு இறந்தது.

இனி, சாவான் போன்றன உடன்பாடு எதிர்மறை இரண்டிற்கும் பொதுவாகவும், வெளுத்தான் போன்றன தன்வினை பிறவினை இரண்டிற்கும் பொதுவாகவும், வருகின்றதைப்போல் செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்குப் பொதுவாக வரக்கூடிய வினைகளும் உண்டு. புத்தகம் திருடிய பையன், என்றால் திருடுவதாகிய காரியத்தைச் செய்தவன் பையனே, ஆகையால் இது செய்வினை. அப்படிக் கல்லாமல், திருடிய புத்தகம், என்றால் திருடியகாரியத்தைச் செய்தது புத்தகமன்று. அக்காரியம் அப்புத்தகத்தின்பால் செய்யப்பட்டது: ஆகையால் திருடப்பட்ட புத்தகம் என்ற பொருளில் இருப்பதால் திருடிய என்பது இங்கே செயப்பாட்டுவினையே. அப்படியே, சோறு உண்ட பையன் என்னும்போது செய்வினையாகவும், பையன் உண்ட சோறு,என்னும்போது அந்த உண்டஎன்னும் சொல்லே செயப்பாட்டு வினையாகவும் நிற்பதைக் காணலாம். எழுதிய படித்த கொன்ற என்பனபோன்ற பெயரெச்சங்கள் இவ்விதமே செய்வினையாகவும்; செயப்பாட்டு வினையாகவும் வருவதற்கு உதாரணங்கள் அமைத்துக் கொள்க.

தன்வினைகள் எல்லாம் செய்வினைகளுந்தான். ஆனால் பிறவினை வேறு, செய்யப்பாட்டு வினை வேறு. பிறவினை தான் செய்யாமல் பிறரைச் செய்விப்பது. செயப்பாட்டுவினை தான் செய்யாமல் தன்மேல் செய்வித்துக்கொள்வது. அவன் யானையைக் கொன்றான்:- கொல்கின்ற காரியத்தை அவனே செய்ததால் இது தன்வினை. அவன் யானையைக் கொல்வித்தான். கொல்வதாகிய காரியத்தை அவன் செய்யாமல் வேறுயாரையோ அக்காரியம் செய்யும்படிசெய்தான், ஆகையால்பிறவினை. அந்த யானை அவனால் கொல்லப்பட்டது:-யானையின்பால் கொல்வதாகிய காரியம் செய்யப்பட்டதாகையால், செயப்பாட்டு வினை.

இந்த யானை அரசனால் கொல்விக்கப்பட்டது. என்னும்போது பிறவினையோடு செயப்பாட்டுவினையும் சேர்ந்துவரக் காண்கின்றோம்.

IV. தெரிநிலைவினை—குறிப்புவினை

முன் சொன்ன பிரிவுகள் அல்லாமல் வினைச்சொற்கள் தெரிநிலை வினையென்றும் குறிப்பு வினையென்றும் வேறொரு விதத்திலும் பிரிக்கப்படுவனவாகும். இதன் இலக்கணத்தை வேறோர் இடத்தில் விரிவாகக் கூறுவோம். இங்கு வில்லன், ஊரன், கரியன், நடையன், புதிய பெரிய சிறிய போன்றவைகள் குறிப்புவினைகளுக்கு உதாரணங்கள் என்பதை மாத்திரம் நினைவில் வைத்துக்கொண்டால் போதும்.

V செயப்படுபொருள் குன்றியவினை—செயப்படுபொருள் குன்றாதவினை :(Intransitive and Transitive).

மரம் வளர்ந்தது, கை உடைந்தது, என வருகையில் எதை வளர்ந்தது, எதை உடைந்தது என்று கேட்க இயலாமல் அவ்வினைச்சொற்கள் நிற்பதால் செயப்படுபொருள் குன்றியவினைகள் ஆகும். மரம் கனிகளைக் காய்த்தது, கை வாளை ஏந்தியது, என வருமாயின் எதைக் காய்த்தது, எதை ஏந்தியது என்ற கேள்விகளுக்குப் பதில் கிடைப்பதால் அவை செயப்படுபொருள் குன்றாத வினையாகும்.

கொடி ஆடியது. குரங்கு கூத்து ஆடியது. என்னுமிவ்வுதாரணங்களால் ஒரேசொல் ஒரு சமயத்தில் செயப்படுபொருள் குன்றியும், மறு சமயத்தில் குன்றாமலும் வருவது கூடுமென்பது தெரியவரும்.

VI முதல்வினை—சினைவினை.

நடந்தது அழுதது சிரித்தது போன்று கால் கண் வாய் எனும் சினை (அல்லது உறுப்பு) களாலேயே செய்யக்கூடிய வினையைச் சொல்வது சினைவினை. பூ என்பது மரத்தின் சினை அல்லது ஓர் உறுப்பு. ஆதலால் மலர் பூத்தது, என்னும் போது பூத்தது என்பது சினைவினை. மரம் சாய்ந்தது, என்போமானால் மரமாகிய முதலே சாய்வதாகிய காரியம் செய்வதாகக்குறிக்கப்படுவதால்அது முதல்வினை. அவன் நீராடினான்,என்றால், நீராடுதலாகிய காரியம் ஒரு உறுப்பிற்கே சிறப்பாகிய காரியமாயிராமல், முதலான அவனே செய்வதால் அது முதல் வினை.

ஆனால், அவன் அழுதான் சிரித்தான் நடந்தான், அல்லது, இம்மரம் பூத்தது, என்றுரைக்கும்போது சினைவினைகளே முதல் வினையாகவும் வரலாகின்றன.

மேல் சொன்ன ஆறு பிரிவுகளும், வினைமுற்று பெயரெச்சம், வினையெச்சம் வினையாலணையும்பெயர் ஆகிய இவைகளுக்கெல்லாம்உரியன. இனி,வினைமுற்றிற்குமாத்திரம்உரிய பிரிவுகள் சிலஉள. இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம்என்ற காலவேற்றுமையால் வினைமுற்றுக்கள் (எச்சங்களைப்போல்) வேறுபடும். தன்மை முன்னிலை படர்க்கை, என்ற இடவேற்றுமையால் வினைமுற்றுக்கள் வேறுப்படும். இவைகளன்றி ஏவல் என்றும் வியங்கோள் என்றும் சிலவினைகள் வரலாம். ஏவல் என்பது, வா, போ, உண், பேசு, நட என்பனபோல் முன்னிருப்பதைப் பார்த்துக் கட்டளை இடுவதைக் குறிக்கின்ற வினைச்சொல். வியங்கோள் என்பது தானேயாகிலும் பிறரேனும் இன்னது செய்யவேண்டுமென்று, வாழ்க செல்க,உண்கஎன்பனபோல் விருப்பத்தைக் காட்டுவது.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு.

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநாட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. 1-8-0 (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

“கலா நிலயம்”

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

“கலா நிலயம்”

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificent classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "**KALANILAYAM**" 11, Vellala St., Purasawalkum, Madras.